164

மெய்ப்பொருட் காமை

(மெய்ப்பொருள் நாயனார் வரலாறு)

43

43



இறைஅருளும் மெய்யுணர்வும்
எவ்வுயிர்க்கும் அன்பும்
எய்திநின்றோர் நாம்வணங்கும்
இன்பஒளிச் சுடரே.

பேராசிரியர் திரு. அடிகளாசிரியர்

பீடுசால் தெய்வப் பெருங்குளம்

மெய்ப்பொருள் உணர்ந்தோர் மேதை உள்ளம்
அறிவெனும் தூயநீர் அளவீய திருக்குளம்;
அதனுள்,
அன்பெனும் தாமரை அழகுற மலர்ந்து,
ஆர்வத் தேனை அளவற நல்கி,
அருள்எனும் மணத்தை அனைவர்க்கும் தருமே;
அறிவும், அன்பும், ஆர்வமும், அருளும்
பெருகி, நலம்செயும் பெரியோர் திருவுளம்,
பிறர்நலம் கருதி எழுந்த
பீடுசால் தெய்வப் பெருங்குளம் அன்றோ.

நூல்குறிப்பு

நூல்பெயர்	:	மெய்ப் பொருட் காதை
ஆசிரியர்	:	திரு. அடிகளாசிரியர்
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு
வெளியிடப்பட்ட நாள்	:	நவம்பர், 1995
உரிமை	:	திரு. அடிகளாசிரியர்
அளவு	:	18×13 செ.மீ.
பக்கங்கள்	:	40+72 = 112
படிகள்	:	1000
அச்சகம்	:	ஸ்ரீ வேலன் பிரஸ், சிதம்பரம்
விலை	:	15—00
வெளியீட்டாளர்	:	திருவருள் நிலைய வெளியீட்டகம் குகையூர் அஞ்சல் நயினார்பாளையம் வழி கல்லக்குறிச்சி வட்டம். வி. இரா. ப. மாவட்டம் 606 301 தமிழ்நாடு

பொருளடக்கம்

பதிப்புரை

இலக்கிய ஆசிரியர் முன்னுரை

இலக்கிய ஆசிரியர் வாழ்வும் பணியும்

அணிந்துரை

தமிழின் சீர்பரவும் திருத்தொண்டர்

இலக்கிய அறிமுகம்

மெய்ப் பொருட் காதை

பதிப்புரை

தந்தையின் தமிழ்த்தொண்டிற்கு உறுதுணையாக விளங்க வேண்டுமென்பது என் முடிபாகும். இதுகாறும் தந்தையின் நூல்கள் பலவற்றைப் பதிப்பிக்க உதவியுள்ளேன். அவ் வகையில் தந்தையார் இயற்றிய மெய்ப்பொருட் காதையைப் பதிப்பித்துள்ளேன். இறையருள் முன்னிற்கக் காலந்தோறும் தந்தையின் படைப்புக்களையும் என் படைப்புக்களையும் வெளியிடப் பெரிதும் முயல்வேன். இவ் வகையில் வாழ்நாள்வரை என் தமிழ்த் தொண்டு ஓயாது.

சேக்கிழார் அருளிய பெரியபுராணத்தின் மேல் எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. வாய்ப்பு நேரும் போதெல்லாம் அவ்விலக்கியத்தைப் படித்து இன்புறுவேன். கண்ணப்ப நாயனார் வரலாற்றை, ''விழிகொடுத்த வேடன்'' எனும் தலைப்பில் நாடகமாக எழுதிச் சென்னை வானொலியில் அரங்கேற்றம் செய்துள்ளேன். அந்நாடகம் பலமுறை மறுஒலிபரப்பும் செய்யப்பட்டுள்ளது. தவத்திரு நந்தனார் வரலாற்றை ஆய்வு நோக்கில் நூலாக எழுதியுள்ளேன். தற்பொழுது மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றை உலக அமைதிக்காக உங்கள் முன் கொண்டு வந்துள்ளேன்.

திருமூலர், நாயன்மார்களில் ஒருவராயிருந்தும் சண்டேஸ்வர நாயனாரைத் தவிர்த்து வேறு யாரையும் குறிப்பிடவில்லை. இருப்பினும்,

''பொய்வேடம் மெய்வேடம் போலவே பூணினும்
உய்வேட மாகும் உணர்ந்தறிந் தோர்க்கே''
(திருமந்திரம், 1660)

என்னும் பாடலடிகள் மெய்ப்பொருள் நாயனாரை உணர்த்துவதாகத் தெரிகின்றது. திருக்கயிலாயத்தில் சிவபெருமானது திருக்கோயிலில் காவல் பூண்ட நந்தியெம்பெருமானது மாணாக்கர்களுள் ஒருவராய், அணிமா முதலிய எண்வகைச் சித்திகளையும் கைவரப்பெற்ற திருமூலர், மெய்ப்பொருள் நாயனாரைக் குறிப்பிட்டுள்ளார் என்றால் அவரின் பெருமையை நம்மால் கூற இயலாது. இத்தகு பெருமைபெற்ற மெய்ப்பொருள் நாயனாரின் வரலாற்றை உங்கள் முன் பதிப்பித்து வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நூலை வெளியிடப் பொருளுதவி நல்கிய எங்கள் ஆதீனச் சீடர்களுக்கும், அணிந்துரை நல்கிய என் ஆசான் அ. பாண்டுரங்கன் அவர்கட்கும், தந்தையாரைப் பற்றிக் கருத்துரை நல்கிய அன்புக்குரிய இணைப்பேராசிரியர் அ. அறிவுநம்பி அவர்கட்கும் மகிழ்வுடன் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை நல்லமுறையில் அச்சிட்டு வழங்கிய சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சக உரிமையாளருக்கும், அவ்வச்சகப் பணியாளர்களுக்கும் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நூலின் அட்டையை வடிவமைத்துக் கொடுத்த சிதம்பரம் சபாநாயகம் அச்சக உரிமையாளருக்கும் நன்றி. வழக்கம்போல் அச்சுப்பிழைகளை அன்புடன் திருத்தி வழங்கிய புலவர் இரா. கணபதி அவர்கட்கும் நன்றி.

என்னுடைய ஆக்கமான செயல்களுக்குத் துணைபுரியும் அத்துணை நெஞ்சங்களையும் வணங்கி மகிழ்கிறேன்.

சிதம்பரம்
25—11—95

இங்ஙனம்
அ. சிவபெருமான்

இலக்கிய ஆசிரியர் முன்னுரை

யான் திருத்தொண்டர் புராணத்தைப் படிக்கத் தொடங்கினேன். அதனுள் மெய்ப்பொருள் நாயனார் புராணத்தைப் படித்தேன். அப்புராணத்துள் மெய்ப்பொருள் நாயனாரின் உயர்ந்த பண்பு என் உள்ளத்தை மிகவும் கவர்ந்தது.

தன்படை வலிமையால் வெல்லமுடியாத பகைமன்னன் ஒருவன், வஞ்சகச் செயலால் வெல்ல எண்ணி, வஞ்சக வேடந்தாங்கி வந்து தன்னைக் கொல்லும் செயலை நிகழ்த்திய பொழுதும், பேரருட் பண்பில் குறையாதவராக இருந்துகொண்டு, பிழைசெய்த அவனுக்குச் சிறு தீங்கும் நிகழவொட்டாமல் காத்து, அவனைப் பாதுகாவலான இடத்திற்குக் கொண்டு போகச் செய்த மெய்ப்பொருள் நாயனாரின் பெருமையானது உலகத்தில் இதுவரை வாழ்ந்திருந்த மக்களின் பெருமையைக் காட்டிலும் உயர்ந்திருப்பதை அறிந்து வியப்பும் உவப்பும் அடைந்தேன்.

மெய்ப்பொருள் நாயனாரின் பெருமையை அறிந்து கொண்ட பொழுது தமிழ்ச் சான்றோர்களாகிய தொல் காப்பியரும் திருவள்ளுவரும் கூறியுள்ள செய்தி என் நினைவிற்கு வந்தது.

தொல்காப்பியர், தம் இலக்கண நூலுள் பொருளதிகாரத்தே புறத்திணையியலில் வாகைத்திணையைக் கூறும் நூற்பாவுள், 1. **ஒல்லார் இடவயின் புல்லிய பாங்**

கினும் என்றும் **2. பிழைத்தோர்த் தாங்கும் காவ லானும்** என்றும் இரண்டு வாகைத்திணைத் துறைகளைக் கூறியுள்ளார். இவற்றின் பொருளாவன.

1. "ஒவ்வாதவர் ஆகிய பகைவர் கண்ணே, நாமும் பகைப் பற்றியே ஒழுகாமல், அவரை நண்பராகக் கொண்டு ஒழுகும் உள்ளப் பாங்கின் கண்ணும், என்பது முதல் துறைக்குப் பொருளாகும். இவ்விலக்கணச் செய்திக்கு இலக்கியமாக இருப்பது.

"பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை
யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு" (874)

என்னும் திருக்குறளாகும். பகையைப் பகையாகவே அமையு மாறு செயல்படாமல் நட்பாய் அமையுமாறு செயற்படுபவரே தகைமை உடையவராவர். அவருடைய தகைமையின் கீழ் உலகம் தங்கி வாழ்வடைகின்றது என்பது மேற் கூறப்பட்ட குறளின் கருத்தாகும். எனவே, திருக்குறள் மேலே கூறிய தகைமை உடையவரையே பண்புடையாளர் என்று பகர்கின்றது.

2. "பண்பின்மையால் நம்பக்கல் பிழை செய்தோர்க்கு, நாமும் பிழையே செய்து விடாமல், நாம் பண்புடையோம் ஆதலின் அவரைத் தாங்கிப் பாதுகாத்த காவற்பகுதி கண்ணும்" என்பது இரண்டாவது துறைக்குப் பொருளாகும். இத்துறைக்கு இலக்கியமாய் அமைவது,

"இன்னா செய்தார்க்கும் இனியவே
செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு" [787[

என்னும் திருக்குறளாகும். எனவே, பகையை நட்பாய்க் கொண்டாழுகுதலும், பகைவர் பிழை செய்யின் அவர் பிழையைக் கருத்தில் கொள்ளாமல் அவருக்குத் தீங்கு நிகழாமல் காத்தலும் ஆகிய இவ்விரண்டும் சிறந்த மக்கட் பண்பு உடையவர்க்கே உரியனவாகும் என்க.

இவை எப்படி வாகையாயின எனின்? பகைக்கண் பகையாகவே ஒழுக வேண்டும் என்று எழும் உள்ளத்தின் தீயபண்பின் வலிமையையும், பிழை செய்தார்க்குப் பிழையே செய்ய வேண்டும் என்று எழும் உள்ளத்தின் தீயபண்பின் வலிமையையும் வென்று விட்டே, பகையை நட்பாய்க் கொண்டொழுகுதலையும், பிழைத்தோர்த் தாங்கும் காவலையும் பெறவேண்டி இருத்தலின் இவ் விரண்டும் வாகைத் திணைக்கு உரியவாயின.

தொல்காப்பியமும் திருக்குறளும் சேர்ந்து கூறிய இந்த உயர்ந்த உள்ளப்பண்பு மெய்ப்பொருள் நாயனாரிடம் இருத்தலை நாம் அறிந்து மிகவும் உவப்பு அடைகின்றோம்.

இப்பொழுதுள்ள உலகநிலைக்கு மெய்ப்பொருள் காதை வேண்டும்:

இப்பொழுது நம் உலகநிலை நன்றாக இல்லை. ஒரே குடும்பத்தினுள்ளும், ஒரே ஊரினுள்ளும், ஒரே நாட்டினுள்ளும் வாழ்ந்து வருகின்ற மக்கள், கருத்து வேற்றுமையாலும், கட்சி வேற்றுமையாலும், சாதி வேற்றுமையாலும், சமய வேற்றுமையாலும் வேற்றுமையடைந்து பகை பெற்றுத்தம்முள் ஒருவரை ஒருவர் குறை கூறியும், வைதும், தாக்கியும், கொலைபுரிந்தும் இன்னோரன்ன செயல்களால் நாட்டைக் கலங்கச் செய்து வருகின்றனர் என்பதை அறிகின்றோம்.

இவ்வாறு அறிவிழந்து, அருளிழந்து குழம்பிக் கிடக் கின்ற இவ்வுலகிற்கு மெய்ப்பொருள் நாயனாரது வரலாறு நன்னெறி காட்டும் வழிகாட்டியாக அமையும் என்று கருதினேன்.

வஞ்சக வேடத்துடன் வந்து பெருந்தீங்கு புரிந்த பகைவன் பக்கலும் பேரருள் தாங்கி., அப்பகை வனுக்குச் சிறிதும் தீங்கு வராமல் காத்த மெய்ப் பொருள் நாயனாரின் உயர்ந்த பண்பு, தீயமக்களின் உள்ளத்தை எல்லாம் நெகிழச் செய்து திருத்தும் என்பது என்நம்பிக்கை.

இலக்கியத் தொடக்கம்

மேற்கூறிய காரணங்களால் மெய்ப்பொருள் நாயனாரின் வரலாற்றை ஒரு இனிய இலக்கியமாக எழுத வேண்டு மென்று கருதினேன். பவ யாண்டு மார்கழித் திங்கள் 17 ஆம் நாள் (1—1—95) ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணிக்கு இவ்விலக்கியத்தை எழுதத் தொடங்கினேன். சரியாக இரண்டு திங்களில் இவ்விலக்கியம் எழுதி நிறை வுற்றது.

இலக்கிய வகை

இவ்விலக்கியம் நடவாத நிகழ்ச்சி ஒன்றைப் புனைந் துரையாகக் கூறவந்ததன்று. தமிழ்நாட்டிலே பண்டு உண்மையாக நடந்த உலகியல் நிகழ்ச்சியைக் கொண்டு இயற்றப்பட்டுள்ள காரணத்தால் இது உள்ளோன் தலைவனாக உள்ளது புணர்த்தல் என்ற இலக்கிய வகையைச் சார்ந்ததாகும். இந்த வகையிலேயே அமையு மாறு முன்னர் **சான்றாண்மை** என்ற இலக்கியத்தையும்

தண்ணிழல் என்ற இலக்கியத்தையும் படைத்துள்ளேன் என்பதை நினைவு படுத்துகிறேன். யான் எப்பொழுதும் திரிபு, யமகம் முதலிய மிறைப் பாடல்களைப் பாட விரும்புவதில்லை. கேட்பவர்க்கு எளிதில் பொருள் விளங்கும் தெளிவு என்னும் நடையிலேயே பாடல்களை இயற்றுவேன். ''தெளிவெனப் படுவது பொருள்புலப் பாடே'' என்பது தண்டியலங்காரம். இவ்விலக்கியம் அந்நடையிலேயே அமைந்துள்ளது. பெரும்பாலும் பண்ணத்தி எனப்படும் பாவினங்களைக் கொண்டும், இடை யிடையே வேண்டுமிடத்து பாவினையும் உரையினையும் பெய்தும் இவ்விலக்கியத்தைப் படைத்துள்ளேன். இவ் விலக்கியம் வேண்டுமிடத்து ஆங்காங்கே விழுமிய கருத்துக் களை உணர்த்திச் செல்வதால் 'தோல்' என்னும் செய்யுள் வனப்பையும் உடையது.

அச்சிடும் முயற்சி

இலக்கியத்தை இயற்றும் முதல் பணி நிறைவுற்றது. பின்னர் இதனை அச்சிடும் பணி தொடங்க வேண்டும். என் இளையமகன் **திரு. அ. சிவபெருமானை** அழைத்து இதனைச் செப்பஞ்செய்து பதிப்பாசிரியனாக இருந்து பதிப்பித்துத் தரவேண்டும் என்று கூறி கையெழுத்துப் படியினையும் ஒருஆயிரம் ரூபாயினையும் கொடுத்தேன். இதனைப் பெற்றுக் கொண்ட அவர் இப்பொழுது அச்சிடும் தாள் முதலானவைகள் எல்லாம் விலை உயர்ந் துள்ளன, எனவே இதனை அச்சிட்டு முடிக்க எண்ணாயிரம் (Rs 8,000) ரூபாய்களுக்கு மேல் செலவாகுமே என்று கூறினார். இதனைக்கேட்ட யான் ''அச்சிடத் தொடங்கு; எவ்வாறோ ஆகும் செலவிற்குரிய தொகையினை வழங்கி விடுவேன்'' என்று கூறி அனுப்பி விட்டேன்.

திருவருட் செயலால் அச்சிடப் பொருள் கிடைத்தது:

குகையூர் திருமூல சித்தநாதர் ஆதீனத்தைச் சார்ந்த குருபரம்பரைக்கு, சேலம் மாவட்டத்திலுள்ள தாரமங்கலம் என்னும் ஊரில் செங்குந்தர் மரபைச் சார்ந்த பல குடும்பத் தினர் சீடராக உள்ளனர். அவருள் ஒரு குடும்பத்தினர் **சந்தவள்ளியார்** குடும்பத்தினர் ஆவர். அவருள் ஒருவராகிய **திரு. மு. கந்தசாமி முதலியாருடைய** புதல்வராய் தற்பொழுது ஓசூரிலே தங்கி "**சிவாசீனிவாசா பில்டர்ஸ்**" (SIVA SRINIVASA BUILDERS) என்கின்ற பெயரில் கட்டிடத் தொழில் புரிந்து வருபவர் **திரு. ச. க. சீனிவாசன்** என்பவராவார். இவருடைய, சித்தப்பார் சந்தவள்ளி சுப்பு முதலியார் அவர்களின் புதல்வராய் உள்ளவர்கள் **திரு. சு. முத்துசாமி, திரு. சு பூபதிராஜா, திரு. சு முருகேசன்** என்பவர்கள் தாரமங்கலத்திலேயே தங்கி பலவகைத் தொழில் செய்து வருகின்றனர். இவ்விரண்டு குடும்பத்தினர்களும் நம்குல குருவாகிய திரு. அடிகளாசிரியர் என்பவர் மூப்படைந்து நோயுற்று வெளியிடங்களுக்குச் செல்ல முடியாத நிலையில் வீட்டிலேயே உள்ளார்; அவருக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் எனத் தமக்குள் கருதிக் கொண்டு இவ்விரண்டு குடும்பத்தினரும் தலா ஐயாயிரம் வீதம் ரூபாய் பத்தாயிரத்தை, குருகாணிக்கையாகக் கொண்டு வந்து கொடுத்தனர். இதனைப் பெற்றயான் மெய்ப்பொருட் காதையை அச்சிட்டு முடித்து விட்டதாகவே கருதி மகிழ்ச்சியுற்றேன். அன்று சேக்கிழார் பெரியபுராணம் பாட உலகெலாம் என்ற சொல்லை இறைவன் திருவருள் உதவிற்று என்பர். இன்று மெய்ப்பொருட்காதையை

அச்சிட இறைவன் திருவருள் பொருளை எனக்கு உதவிற்று என்று கருதி மகிழ்ச்சியடைந்தேன்.

வாழ்த்து

இதனை அச்சிடப் பொருள் உதவிய தாரமங்கலம் சந்தவள்ளியார் குடும்பத்தைச் சார்ந்த ஓசூர் கட்டிடத் தொழில்திபர் **திரு. ச. க. சீனிவாசன்** அவர்கட்கும், அவரின் சிறிய தந்தையார் புதல்வர்களாகிய **தாரமங்கலம் திரு. சு. முத்துசாமி. திரு. சு. பூபதிராசன், திரு. சு. முருகேசன்** என்பவர்களுக்கும் என்னுடைய நல்வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்று யான் நரம்பு நோயால் பாதிக்கப் பெற்று பல ஆண்டுகளாக வீட்டிலேயே தங்கி உள்ள எனக்கு, ஈரோட்டில் வாழ்ந்து வாணிபம் செய்துவரும் எங்கள் ஆதீனச் சீடர்கள் புரவலர்களாக இருந்து என்னைப் புரந்து வருகின்றனர், அப்புரவலர்களின் பெயர்கள் வருமாறு:

ஈரோடு

1) உயர்திரு. **ஆ. பழனிசாமி** அவர்கள்,
பவானி பிரிண்டிங் மில்ஸ்

2) உயர்திரு. **ஆ. முத்துசாமி** அவர்கள்
இராம் பிரிண்டிங் மில்ஸ்

3) உயர்திரு. **ஆ. தனபாலன்** அவர்கள்
இராம் பிரிண்டிங் மில்ஸ்

4) உயர்திரு. **ஆ. மோகனசுந்தரம்** அவர்கள்
இராம் பிரிண்டிங் மில்ஸ்
கல்வடங்கம் அங்காளம்மன் திருக்கோயில்
திருப்பணியாளர்.

5) உயர்திரு. **கு. சி. க. இராமலிங்கம்** அவர்கள்
இராமலிங்கம் பிளாஸ்டிக்ஸ் இண்டஸ்ட்ரீஸ்

6) உயர்திரு. **மு. பாலசுப்பிரமணியம்** அவர்கள்
சக்தி பிரிண்டர்ஸ்

7) உயர்திரு. பெரியூர் **அ. சிங்காரம்** அவர்கள்
முத்து துணிவணிக நிலையம்
கல்வடங்கம் அங்காளம்மன் திருக்கோயில்
திருப்பணியாளர்

8) உயர்திரு. **கு. இராமலிங்கம்** அவர்கள்
வெல்ல மண்டி, கல்வடங்கம் அங்காளம்மன்
திருக்கோயில் திருப்பணியாளர், ஆர். எஸ். புரம்,
கோயமுத்தூர்

மேற்குறிப்பிட்ட பெருந்தகையாளர்கள், நான் நோயுற்ற காலத்திலிருந்து இன்றுவரை நல்ல பல உதவிகளைச் செய்து வருகின்றார்கள். இவர்களுக்கெல்லாம் என் அன்பான நல்வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எழுதி எழுதியே முதிர்ந்துவிட்ட என் விரல்கள் இன்று எழுதப்பணிய மறுக்கின்றன. இந்நிலையில் சின்னசேலம் சிவநேசர்மடம் உயர்திரு **சி. குமாரவேலையர்** அவர்களின் பேரரும், உயர்திரு. **கு. குகநேசன்** அவர்களின் புதல்வருமாகிய திருநிறைசெல்வன் **கு. மோகன்** என்பார் என் அருகிலிருந்து மெய்ப்பொருட் காதையின் கையெழுத்துப் பிரதியை எழுதிக்கொடுத்தார். அக்கையெழுத்துப் பிரதியை என் மூத்தமகன் **அமரர் அ. பேராசிரியன்** அவர்களின் இளைய புதல்வியாகிய திருநிறைசெல்வி

பே. **பாமினி** திருத்தம் செய்து அழகான முறையில் 'அச்சுக்காப்பி' தயார் செய்து கொடுத்தார். எனவே, இவ்விருவர்களுக்கும் என் அன்பான நல்வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழம் புலவர்கள் போன்ற எளிய நிலையிலேயே என் இல்லத்தை நான் வைத்திருக்கும் நிலையிலும், என் தமிழ்ப்பணி தொடர்ந்து நடைபெற எனக்கு உதவி நிற்கும் என் மனைவி சம்பத்து, மகன்கள், மருமகள்கள் ஆகியோர் களுக்கும் நன்றி கூறக்கடவேன்.

என்னைப் பார்க்காமலே என்பால் ஆழ்ந்த பற்றும் மதிப்பும் கொண்டொழுகும் புதுவைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் **முனைவர் அ. பாண்டுரங்கனார்** அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை நல்கிச் சிறப்பித்தமைக்கு என் நன்றியை வாழ்த்துக்களுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்னுடைய படைப்புக்களை நூலாக்கி வெளியிடுவதில் மிக ஆர்வம் கொண்டவர் எனது இளைய புதல்வராகிய நிறைநாட்செல்வர் **அ. சிவபெருமான்** ஆவார். அவரின் பெரு முயற்சியால் இந்நூல் வெளிவருகின்றது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

20—11—1995
குகையூர்

திரு. அடிகளாசிரியர்

இலக்கிய ஆசிரியர் வாழ்வும் பணியும்

தமிழ்நாட்டில் தென்னார்க்காடு மாவட்டம் கல்லக்குறிச்சி வட்டத்தின் தென்கோடியில் வடவெள்ளாற்றின் வடக்குக் கரையில் உள்ளது குகையூர் என்னும் கூகையூராகும் இவ்வூரை இலக்கியங்கள் குகையூர் என்று கூறும். பொது மக்கள் கூகையூர் என்று கூறுவர்.

திருமூல நாயனாருடைய கொள்கையில் பயிற்சியுடைய சித்தநாதர் என்னும் சித்தர் ஒருவர் இவ்வூருக்கு வந்து, ஆற்றங்கரைப் புதருள் தங்கி சிவயோக சமாதியை மேற்கொண்டிருந்தனர். அவர் அட்டமா சித்தியிலும் வல்லவராய் இருந்தார்.

அவ்வூரை ஆண்டிருந்த குறுநில மன்னராகிய **மாலாங்கன்** என்பவன் சித்தநாதருடைய பெருமையை. உணர்ந்து தன் மனைவியுடன் வந்து பேரன்புடன் அவர்க்குப் பணிவிடை செய்தொழுகினான். அவ்விருவருடைய பேரன் பினையும் மகப்பேறின்றி மூப்படைந்துள்ள நிலையினையும் உணர்ந்த சித்தநாதர் அவ்விருவரையும் இளமை உடையவ ராக ஆக்கி, வீரசைவ சமய நெறியை மேற்கொண்டு வாழுமாறு செய்து, பக்குவற்கு உபதேசிக்கும் மாதவக் குருபரனாக மாலாங்கனை ஆக்கினர்.

அம்மாலாங்கனிலிருந்து அவன் பரம்பரை சித்த நாதேஸ்சுராதீனமாக ஆயிற்று.

அப்பரம்பரையில் பிற்காலத்தில் **பட்டத்துப் பெரிய சாமி ஐயர்** என்பவர் வளர்ந்து வந்தார். அவர் மனைவி **குங்கும அம்மாள்** ஆவர். அவ்விருவரும் நன்கு படித்தவர்.

அவ்விருவர்க்கும் கி. பி. 1910-இல் **சாதாரண யாண்டு சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாள் ஞாயிற் றுக்கிழமை தனுர் இலக்கினத்தில் பூசம்நாளில் நம் அடிகளாசிரியர் முதல் மகனாகப் பிறந்தார்.** இவரின் பிள்ளைப்பெயர் **குருசாமி அய்யர்** என்பதாகும். பிற் காலத்தில் தனித்தமிழ் இயக்கத்தலைவர் தவத்திரு. **மறை மலையடிகளார்** கருத்துப்படி **திரு. அடிகளாசிரியர்** எனப் பெயரை மாற்றிக்கொண்டார்.

இளமைக்காலமும் கல்வியும்

இவர்க்கு ஏழாம் யாண்டில் தந்தையார் காலமாகி விட்டார். இவர் தாயார் குங்கும அம்மாள் என்பவர்தான் இவரை பேணிப்புரந்து கல்வி கற்குமாறு செய்தார். பெரம் பலூருக்கு அண்மையிலுள்ள நெடுவாசல் என்னும் ஊர் இவர் தாயார் பிறந்த ஊராகும். தாய்மாமன் இருவராவர். மூத்தவர் திரு **கு. சுப்பிரமணிய தேவர்.** இளையவர் திரு. **கு. சிவப்பிரகாச தேவர்** ஆவர். இவ்விருவரும் நன்கு தமிழ் பயின்றவர்கள். மருத்துவக்கலை, சோதிடக் கலை ஆகியவற்றிலும் வல்லவர்கள். அடிகளாசிரியர் இவர் கள் (தாய்மாமன்) வீட்டில் தங்கி தமிழ்ப் பயிற்சியையும் வடமொழிப் பயிற்சியையும் பெற்றார்.

பெரம்பலூரில் வாழ்ந்த **திரு. மருதநாடார்** என்பவரிடம் சோதிடக் கலையைக் கற்றுக்கொண்டார். முசிறி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய் இருந்த உயர்திரு. **வீ. குமாரவீரையர்** என்பவரிடம் நன்னூல் காண்டிகை உரையை முறைப்படி பாடங் கேட்டார். 1937-இல் இவர் தனியாகப் பயின்று சென்னைப் பல்கலைக் கழகத்தில் தேர்வெழுதித் தமிழ்ப் புலவர் பட்டத்தைப் பெற்றார்.

மயிலம் கல்லூரியில் பணி

14—7—1938-இல் மயிலம் திருமடத்தில் ஸ்ரீமத்சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி என்ற பெயரால் ஒரு தமிழ்க்கல்லூரி தோன்றிற்று. அக்கல்லூரியில் இவர் முதல் ஆசிரியராக அமர்ந்தார். அக்கல்லூரி பல்கலைக்கழக ஒப்புதல் பெற்றபின் 1—7—41-இலிருந்து 30—11—41 வரை விரிவுரையாளராகவும், 1—12—42-இலிருந்து 1—7—1950 வரை துணைத்தலைவராகவும் அங்குப் பணியாற்றினார்.

கரந்தைக் கல்லூரிப் பணி

பின்னர் 3—7—1950-இலிருந்து 3—7—1970 வரை தஞ்சாவூர் கரந்தைப் புலவர் கல்லூரியில் விரிவுரையாளராகவும், துணை முதல்வராகவும் பணியாற்றினார். 4—4—70-இலிருந்து ஓய்வு பெற்றார்.

ஓய்விற்குப்பின்

சேலம் மாவட்டம் ஆத்தூரில் அமைந்திருந்த தனியார் தமிழ்க் கல்லூரி ஒன்றில் முதல்வராக மூன்றாண்டுகள் பணியாற்றியுள்ளார்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் ஆராய்ச்சியாளராக ஓராண்டு (1977) பணியாற்றியுள்ளார்.

20—1—1982 ஆம் நாளிலிருந்து 1—10—1985 ஆம் நாள் வரை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சுவடிப் புலத்தில் சிறப்புநிலை இணைப்பேராசிரியராக அமர்ந்து தொல்காப்பிய ஆராய்ச்சியைச் செய்து வந்தார். அதன்பின் மூப்பின் காரணமாகத் தமிழ்ப்பல்கலைக்கழகப் பணியிலிருந்து தாமே விலகிக் கொண்டார். மூப்பின் காரணமாகத் தமிழ்ப்பல்கலைக் கழகப் பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட அவர் தம் இல்லத்திலிருந்து அப் பணியை (தொல்காப்பியப் பதிப்புப் பணியை) நிறைவு செய்து வழங்கினார்.

குடும்பம்

இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்.

என்று தமிழுக்காக வாழ்ந்து வரும் பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள், தாம் பிறந்த ஊரிலேயே பிறந்த கூரை வீட்டிலேயே மண்தரையில் இன்னமும் அமர்ந்து இந்த மண்ணோடு இருக்கும் பற்றை நிலைப் படுத்துவார் போல் வளங்குன்றிய வாழ்வே வாழ்ந்து வருகிறார். தமிழ்ப்பணிக்காகவே தம்பொருளாதாரத்தைச் செலவிட்டு, வேண்டுமென்றே வளங்குன்றிய வாழ்வைத் தேடிக்கொண்டவராவார்.

அறிவுசான்ற மூன்று ஆண்மக்களும், அமைதி சான்ற மூன்று பெண்மக்களும் வாசுகி அனைய மனையாளுமே இவரது சொத்துக்களாக உள்ளனர். சிந்தனை செய்தே சிறந்த இவர் உடல் இன்று பலரின் சிந்தனைக்கு உரியதாக

உள்ளது. எழுதி எழுதியே முதிர்ந்த இவரது கைகள் எழுத மறுக்கின்றன. நடந்தே சிறந்த கால்கள் நடை தடுமாறு கின்றன. ஆனால் சிந்தனை மட்டும் தடுமாறாமல் தமிழையே இன்றும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது. அகவை (86) முதிர்ந்த நிலையில் எந்த ஆசையும் அற்று, தம் நூல்கள் அச்சேறித் தமிழகத்தில் உலா வரவேண்டு மென்ற பற்று ஒன்றுடன் மட்டுமே இவர் வாழ்ந்து வருகிறார்.

அடிகளாசிரியரின் படைப்புக்கள்

1. உரைநூல்கள்:

அ. உரைப் பதிப்புக்கள் (உரையோடு விளங்கிய நூல்களைப் பதிப்பித்தல்)

1	அருணகிரி அந்தாதி - சரசுவதிமகால்	வெளியீடு	1967
2	மருதூரந்தாதி உரை-சரசுவதிமகால்	வெளியீடு	1968
3	காலச்சக்கரம் - சரசுவதிமகால் வெளியீடு (சோதிட நூல்)		1969-79
4	வராகர் ஓராசாத்திரம் (சோதிட நூல்) சரசுவதிமகால் வெளியீடு		1970-81-91
5	சிவஞான தீபம் உரை-சரசுவதிமகால்	வெளியீடு	1970
6	சிவப்பிரகாச விகாசம் உரை-சரசுவதிமகால் வெளியீடு		1977

ஆ. உரைவரைவுகள் (தாமே உரை எழுதி வெளியிட்டமை)

7	முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் உரை	1958
8	சேக்கிழார் பிள்ளைத் தமிழ் உரை	1967

9	தமிழகக் கல்வெட்டு விளக்கவுரை (மு. கோவிந்தராசனாருடன் இணைந்து எழுதியமை)	1957-58
10	திருவலஞ்சுழி தேவாரப்பாடல்கள் உரை	1956
11	திருவாசகக்கோயில் திருப்பதிகம் உரை	1981
12	சிவபுராணச் சிற்றுரை	1986
13	சதமணிமாலை மூலமும் உரையும்	1990
14	சித்தாந்த சிகாமணி அங்கத்தலத்திரட்டு உரை	1992
15	ஸ்ரீமத்சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி எழுச்சி	1993

2. பதிப்பு நூல்கள்

(ஓலைச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தவை)

16	வீரசைவப் பிரமாணம்	1936
17	சதமணிமாலை (மூலம் மட்டும்)	1938
18	சிவப்பிரகாச விகாசம் (மூலம் மட்டும்)	1939
19	காமநாதர் கோவை	1947
20	மேன்மைப் பதிகம்	1957
21	சதுர்லிங்க தசகோத்திர சதகம்	1958

3. ஆராய்ச்சி நூல்கள்

22	தொல்காப்பியம் - எழுத்து இளம் பூரணம்	1969
23	'ஐவகையடியும்' என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கம் (சென்னைப் பல்கலைக்கழகம்)	1977
24	தமிழ் இலக்கண இலக்கியங்களில் சைவசித்தாந்தம்	1978

25 தொல்காப்பியம் - சொல் - இளம்பூரணம் (தமிழ்ப்பல்கலைக்கழகம்) 1990

26 தொல்காப்பியம் - பொருள் - செய்யுளியல் (தமிழ்ப்பல்கலைக்கழகம்) 1985

27 தொல்காப்பியம்-பொருள்-எட்டு இயல் மட்டும் (தமிழ்ப்பல்கலைக்கழகம் அச்சில்)

4. படைப்பிலக்கிய நூல்கள்

அ. செய்யுள் வடிவம்

28 பிள்ளைப் பாட்டு 1945

29 திருஅரசிலிக் காதை 1948

30 குழந்தை இலக்கியம் 1963

31 சான்றாண்மை (கோப்பெருஞ்சோழன் பற்றியது) 1964-1975

32 சென்னிமலை முருகன் தோத்திரம் 1980

33 அரசியல் இயக்கம் 1981

34 பல்சுவைப் பண்ணத்திப் பாடல்கள் (குழந்தை இலக்கியம்) 1983

35 அருள் திருமாரியம்மன் திருப்பதிகம் 1984

36 உளத்தூய்மை 1984-94

37 தண்ணிழல் (திருமுடிக்காரியைப் பற்றிய அரிய இலக்கியம்) 1990

38 மறவர் நத்தக்குன்றமரும் திருமுருகன் திருவடிப் பாமாலை 1993

39 தொழிலியல் 1993

40 மெய்ப் பொருட் காதை 1995

ஆ. உரைநடை

41 எங்களூர் 1937

42 தொடக்கப்பள்ளி-நாடகம் 1949

43 வீரசைவ சிவ பூஜாவிதி 1976

44 விலையேற்றமும் வாழும் வழியும் 1984

பொருள்முட்டுப் பாட்டினால் முடங்கிக் கிடக்கும்

அச்சேறா நூல்கள்

1 குழந்தை இலக்கியம் (தொகுதி மூன்று)

2 குதம்பைச் சித்தர் பாடலும் உரையும்

3 கலித்தொகை உரை (குறிஞ்சிக் கலி)

4 தொல்காப்பியச் செய்யுளியல் ஆராய்ச்சி (உரைநடை)

5 பிரபுலிங்கலீலை உரை

6 அடிகளாசிரியரின் சமுதாயப் பாடல்கள்

7 அடிகளாசிரியரின் இலக்கணக் கட்டுரைகள்

8 அடிகளாசிரியரின் இலக்கியக் கட்டுரைகள்

9 திருக்குறள் உரை (133 குறள் வரை)

10 முப்பால்-உரைநடை

11 மகாவாக்கிய ஆராய்ச்சி

பாராட்டுக்கள்

1 1967-ஆம் ஆண்டு இராசபாளையம் மணிமேகலை மன்றத்தார் நிகழ்த்திய தொல்காப்பியம் இரு சூத்திர விளக்கக் கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு முதற்பரிசு பெற்றுள்ளார்.

2 கோயம்புத்தூர் மாவட்டம் பேரூர் மடாலயத்தைச் சேர்ந்த சுவாமிகள் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் இவரைப் பேரூர் ஆதீனப் புலவ ராக்கிச் 'செந்நாப்புலவர்' என்ற பட்டத்தை வழங்கி யுள்ளார்.

3 தென்னார்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி தமிழ்க் கவிஞர் மன்றத்தினர் இவருடைய தொல்காப்பியம் எழுத்ததிகாரப் பதிப்பினைப் பாராட்டி, பொன்னாடை போர்த்திப் பாராட்டுப் பத்திரம் வழங்கியுள்ளார்.

4 தஞ்சாவூர் கரந்தை மீனாட்சியம்மன் திருக்கோயிலில் முறையாகச் சைவ சித்தாந்த நூல்களைப் பாடம் சொன்னதால் அக்கோவில் சைவ பிரச்சார சபை யினரால் பாராட்டப் பெற்றுள்ளார்.

5 தமிழ்மொழிக்கு எண்ணிறைந்த சேவைகளைப் பல்லாண்டுக்காலம் சலியாது செய்து வருகின்றமையால் திருக்கோவலூர் பண்பாட்டுக் கழகம் 1992-ஆம் ஆண்டிற்குரிய கபிலர் விருதை இவருக்கு வழங்கி யுள்ளது.

6 சென்னைக் கம்பன் கழகத்தின் பாராட்டும் பண முடிப்பும் இவருக்கு வழங்கப்பெற்றன. (1992)

சிதம்பரம்
25—11—95

அ. சிவபெருமான்

அணிந்துரை

அ. பாண்டுரங்கன்
தமிழ்ப்பேராசிரியர்
புதுவைப் பல்கலைக்கழகம்

புதுவை
25—11—95

உலகமொழிகளில் தமிழ்மொழி "பக்தியின் மொழி" என்று பாராட்டப் பெறுகின்றது. பக்திச்சுவை வழிந்தோடும் பனுவல்கள் தமிழ்மொழியில் தான் மிகுதியாக உள்ளன. தமிழகத்தில் பக்தி இயக்கத்தைத் தோற்றுவித்த பெரியார் காரைக்கால் அம்மையார் என்னும் அருந்தமிழ் மூதாட்டியார் ஆவார்; அவர், தம்அற்புதப் பாக்களால் பக்தி இலக்கியத்துக்குத் தோற்றுவாய் செய்தார். எனினும் அவருக்கு முன்னும் பின்னும் சிவனையே முழுமுதற் பொருளாகக் கொண்டு, தம் வாழ்வைத் தொண்டு வாழ்வாகவே மாற்றிக்கொண்ட பெரியோர்கள் பலர் இந்நாட்டில் வாழ்ந்தனர். அவர்களைப் பிற்காலத் தமிழ் உலகு "நாயன்மார்" என்று போற்றியது. 'நாயன்' எனில் கடவுள், அரசன், தலைவன் என்று தமிழ் லெக்சிகன் பொருள் தருகின்றது; 'மார்' பல்லோர் படர்க்கை. 'நாயன்மார்' என்போர் மக்களுக்குச் சமய வாழ்வில் வழிகாட்டிய திருக்கூட்டத்தார்; தலைவர்கள். அவர்கள் நல்லது, கெட்டது என்னும் இரண்டையும் கடந்து நின்ற மேலோர். கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்; ஓட்டையும் செம்பொன்னையும் ஒக்க

நோக்கும் பக்குவர். கூடும் அன்பினில் இறைவனைக் கும்பிடு வதையே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட மெய்ப்பொருளாளர்; சிவபெருமானையும் சிவவேடத்தையும் ஒன்றென மதித்த தொண்டர் குழாத்தினர். புழுவாய்ப் பிறக்கினும், இறைவன் பொன்னடியை மறவாதிருக்கும் மாண்பினர், அம்பலக் கூத்தனின் அருட்காட்சியை ஊனக் கண்களால் காணக் கூடுமேல், மனித்தப் பிறவியையும் வேண்டும் மாண்பினர்.

அளவிலாப் பெருமை மிக்க தமிழ்ச் சான்றோர்களாகிய நாயன்மார் வரலாற்றைத் தென்னாடு செய்த தவப்பயனால் முதன் முதலில் தொட்டுக் காட்டியவர் **நம்பியாரூரர்** என்று போற்றப்பெறும் **சுந்தரமூர்த்திசுவாமிகள்.** "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" எனக் கூத்தப் பிரானாலேயே அடிஎடுத்துக் கொடுக்கப்பட்டு முடிக்கப் பட்டது சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத் தொகை. இத்தொகையினைப் பின்னர் வந்த **நம்பியாண் டார் நம்பிகள்** தாம் கேட்டும் ஆய்ந்தும் கண்ட உண்மை களைத் திருத்தொண்டர் திருவந்தாதியாகப் பாடினார்; ஞானசம்பந்தர் மீதும் திருநாவுக்கரசர் மீதும் பல நூல்கள் செய்தார். இவற்றை எல்லாம் முதன்மை நூல்களாகக் கொண்டு, "தொண்டர்சீர் பரவுவார்" ஆகிய சேக்கிழார் "**திருத்தொண்டர் புராணம்**" என்னும் இனிய காவியத்தை இயற்றினார். அதன் இனிமை, பக்தியின் சிறப்பு, கனிவு கருதித் தமிழ் உலகம் அதனைப் "**பெரிய புராணம்**" என்று போற்றுகின்றது. பெரிய புராணத்துள் புகலப்பெறும் நாயன்மார்களுள் ஒருவரே **மெய்ப்பொருள் நாயனார்.** அவருடைய வாழ்க்கையைச் சேக்கிழார் "மெய்ப்பொருள் நாயனார் புராணம்" என்னும் பகுதியில்

24 பாடல்களாகப் பாடியுள்ளார். அவ்வரலாற்றைச் சற்று விளக்கியும் விரிவுபடுத்தியும் ஒரு குறுங்காப்பியமாகப் பேராசிரியர் திரு. **அடிகளாசிரியர்** அவர்கள் "**மெய்ப் பொருட் காதை**" என்னும் இந்த நூலை யாத்துள்ளார்.

தமிழ் இலக்கண மரபுகளின்படி இது ஒரு வழி நூல்; முதன் நூலின் பொருளுக்குச் சிறப்பளிக்கும் வகையில் சிலவற்றைக் கூட்டியும் குறைத்தும் புதுவதாகப் புனைந்து கூறுதல் வழி நூலின் சிறப்பாகும். மூல நூலாகிய "மெய்ப் பொருள் நாயனார் புராணத்தில்" இல்லாத நாட்டு வருணனையும் நகரச் சிறப்பும் மெய்ப்பொருள் பிறப்பும் அவரின் பெயர்க்காரணமும் அவர்தம் சீரிய மாண்பும் கற்றோர் உள்ளம் கழிபேருவகை கொள்ளும் வண்ணம் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் காப்பியத்திற்குரிய இலக்கணங்கள் பொருந்தும் வகையில் நூல் பாடப் பட்டுள்ளது.

பெரிய புராணத்தில் "மெய்ப்பொருள் நாயனார் புராணம்" இருக்கும் பொழுது, இதனை ஏன் மீண்டும் பாட வேண்டும் என்று சிலருடைய உள்ளத்தில் ஐயம் எழுவது இயல்பே ஆகும். அன்னார் நிலைபேறு பெறும் இலக்கியத்தின் சிறப்புகளை ஊன்றிக் கவனித்திலர். கால வெள்ளத்துக்கு இரையாகாமல், நவில்தொறும் புதுப்புதுப் பொருள்களைத் தருவதாக அமைவனவே சிறந்த இலக்கியங்கள். காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப இவற்றை மறுவாசிப்பு (reinterpretation) செய்துகொள்ள முடியும். சிலப்பதிகாரத்தைத் தமிழர்களின் பெருமை கூறும் நூலாக-தமிழர்களின் தேசியக் காப்பியமாக நாம் இன்று கருதுகின்றோம். "அறம் வெல்லும்; பாவம் தோற்கும்" என்பதனையே அடிநாதமாகக் கொண்டிருப்பதால் அன்றோ,

இன்றும் நாடும் நகரமும் நன்கறியும்படி, கம்பராமாயணம் மறு வாசிப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

அது போன்றதே மெய்ப்பொருள் நாயனாரின் புராணமும். இன்று உலகம் வன்முறையால் அலைக்கழிக்கப் படுகின்றது. எங்கும் எதனிலும் வன்முறை! இளைஞர்களின் கைகளில் தானியங்கிக் கொலைக் கருவிகள்! காக்கை குருவிகளைப் போல, மனித இனத்தை மனித இனமே வேட்டையாடும் கொடுமையின் உச்ச நிலை! **"தொழுத கையுள்ளும் படையொடுங்கும்"** என்று, அன்று வள்ளுவப்பெருந்தகையார் அகக் கண்ணால் கண்ட காட்சி, இன்று நாட்கடனாக மாறிக்கொண்டிருக்கின்ற காலம். **அண்ணல் காந்தியடிகள்** கொடியவனின் குண்டுகளுக்கு இரையாகி மண்ணில் வீழ்ந்தபோது இறைவனின் திருநாமத்தை உச்சரித்தது அவருடைய செந்நா. எனினும் உலகம் நம் உள்ளங்கைகளுக்குள் வந்துவிட்டது. அறிவு விரிந்த அளவுக்கு மனம் விரிவுபெறவில்லை. பரந்து கிடந்த உலகம் திருந்தியபாடில்லை. அறிவியலின் புயல் பாய்ச்சலால் உலகம் சுருங்கி விட்டது போன்றே, விரிந்து கிடந்த உள்ளமும் சுருங்கிக்கொண்டு வருகின்றது. இந்த நிலையில் மெய்ப்பொருள்நாயனார் போன்ற பெருமக்களின் வாழ்க்கை நம்மைச் சிந்திக்க வைக்கின்றது; பகைவனுக்கும் அருளுகின்ற பண்பை எண்ணிப் பார்க்கத் தூண்டுகின்றது; **இத்தகைய நூல்கள் கர்லத்தின் தேவையை நிறைவு செய்கின்றன.**

மெய்ப்பொருள் நாயனாரின் உண்மைப்பெயர் கால வெள்ளத்தில் மறைந்தது போலும். மெய்ப்பொருளை உணர்ந்து மெய்ப்பொருளாகவே தம் வாழ்க்கையை அமைத்துக்கொண்ட காரணத்தால், மக்கள் அவர் இயற்

பெயரை விட்டுவிட்டுச் சிறப்புப் பெயராலேயே போற்றத் தொடங்கினர். எத்துணை பேருக்கு **அண்ணல் காந்தியடிகளின் இயற்பெயர் கரம்சந்த் மோகன்தாஸ் காந்தி என்று தெரியும்?** இவருடைய நாடு மலாடு, மிலாடு என்று பிற்கால வழக்கில் மருவி வழங்கிய மலையமான் நாடாகும். சங்ககால வள்ளல் மலையமான் திருமுடிக்காரியின் நாடே மெய்ப்பொருள் நாயனாரின் நாடாகும். மலையமான்களின் தலை நகரம் கோவலூர்; அது பிற்காலத்தில் ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் தோன்றும் வளமான இடமாகப் பரிணமித்து, திருக்கோவலூராக மலர்ந்து, மணம் வீசியது. திருக்கோவலூரிலிருந்து அரசோச்சிய மெய்ப்பொருள் நாயனாரின் வரலாறே இக்குறுங்காவியத்தின் பாடு பொருளாகும். மைபொதி விளக்குப் போல, மனத்திலே வஞ்சகத்தை மறைத்து வந்து, தான் நினைத்ததையே செய்து முடித்த முத்தநாதனின் மீது இம்மியும் வெகுளாமல், அவனைப் பாதுகாப்புடன் அவன் நாட்டுக்கு அனுப்பி வைத்த பெருமை மெய்ப்பொருள் நாயனாருடையது; அதுவே அவரது வாழ்க்கையாகி விட்டது. பிற்காலக் கல்வெட்டுகள் ''தத்தா! நமரே காண்'' என்ற மிலாடுடையார்'' என்று அவருடைய பெருமையைப் பதிவு செய்துள்ளன.

இனி நூலின் நயங்களில் சிலவற்றைக் காண்போம்:

மலையமான் நாடு குறிஞ்சி, முல்லை, மருதநிலங்கள் ஒன்றோடொன்று மயங்கிக் கிடக்கும் நன்னாடு. அங்கு முல்லையில் ஒரு காட்சி. முல்லை நிலத்தில் இனிய புல்லை மேய்ந்தும், காட்டாற்றில் பொங்கிப் பெருகும் நீரைப் பருகியும் ஆநிரைகள் பாலைப் பொழிகின்றன; அமிழ்தம்

போன்ற பாலைச் சொரிகின்றன. பாலின் வெள்ளம் கடல் போலப் பெருக்கெடுத்து ஓடுகின்றதாம்.

மான்படு கானத்துள்ள மலிபசும் புல்லை மேய்ந்தும்
மீன்படு கான யாற்றுள் மேம்படு புனலை உண்டும்
ஆன்படு நிரைக ளெல்லாம் அளக்கர்போல் பாலை நல்க
மேம்படு தயிர்மோர் வெண்ணெய் மேவின அமிழ்தம் போன்றே.
(பாட்டு எண், 11)

கோதை நாச்சியார் "வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்" என்று போற்றினார்; பேராசிரியர் கர்ட்டும் ஆநிரைகள் அளக்கர் போல் - கடல் மடை திறந்தது போல் - பாலைப் பொழிகின்றனவாம்! இனிய கற்பனை!

ஔவையாரின் புறநானூற்றுப் பாடலின் (157) கருத்து புலவரின் நாவில் புத்துரு எடுக்கின்றது:

நாடும் காடும் அவலும் மிசையும்
நான்கும் ஒன்றே; நல்லோர்தாம்
கூடும் இடமே நல்லிட மென்று
கூறும் அவ்வை சொற்கேற்ப ... ...
(பாட்டு எண், 20)

புறநானூற்று வரிகள் காலத்திற்கு ஏற்ற கோலம் கொள்கின்றன.

முத்தநாதன் இயல்பைப் பற்றிக் கூறும்போது புலவர் வடித்துள்ள கருத்துகள், இன்றைய வாழ்வின் அவலத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன:

நாட்டினை ஆளும் நன்னிலை பெற்றோர்
நாட்டு மக்கட்கு நலஞ்செயல் வேண்டும்;
அந்த எண்ணமே அவர்அகத் தின்றி
நாட்டு மக்களின் நற்பணிப் பொருளைத்தம்
வீட்டிற் குவிக்கும் விருப்பமே கொள்வர்;
அம்முதற் பணியை ஆக்கிட அடியாய்
அவர்செயும் தீமை அளவிலை அந்தோ! ... .

(பாட்டு எண், 33)

முத்தநாதன் பலமுறை நாயனாரோடு போர்செய்தும் அவனால் அவரை வெல்ல முடியவில்லை. அவரை, வஞ்சனையால் தான் வெல்ல வேண்டும் என்று முத்தநாதன் முடிவு செய்கின்றான். இச்செயலைக் கவிஞர் கூறும் போது "நரிச்செயல்" என்று இகழ்வதோடு முத்தநாதனை எலியினார்" கூட்டத்தில் வைத்துப் பேசுகின்றார். புலி போன்ற மெய்ப்பொருள் நாயனாரை எலியாகிய முத்தன் தோற்கடிக்க உள்ளானே என்ற இகழ்ச்சிக் குறிப்பு பாட்டின் தொனிப் பொருளாகி நம்மை மகிழ்விக்கின்றது.

வேணிகள் முடித்துக் கட்டி, பொய்த்தவவேடம் பூண்டு முத்தநாதன் மெய்ப்பொருளாரின் கோவல் நகருக்குள் வருகிறான்; பஞ்சாக்கர மந்திரத்தை அவன் வாய் உரத்த குரலில் உச்சரிக்கின்றது. மனத்தில் வஞ்சத்தைப் புதைத்துக் கொண்டுள்ள கொடியோன் "மோகம் நீக்கும் ஐந்தெழுத்தை, நாகம் போன்ற நாவாலே, நன்றாய் உரைத்து வந்தானே" என்று புலவர் புழுங்கும்போது, நம் மனத்தில் சீற்றம் எழுகின்றது.

முத்தநாதனின் புறவேடமும் பொய்ப்பேச்சும் வாசகன் உள்ளத்தில் தெளிவாகப் பதியுமாறு அவன் பேசுவதாகக்

கவிதை அமைகின்றது. முத்தநாதனைச் சிவனடியார் என்றே கருதி, மெய்ப்பொருள் நாயனார் வணங்க அவ்வஞ்சன் தன்னை அறியாமலேயே, "உங்கள் பெருமான் ஐம்முகத்தான் உரைத்த மறைகள்... விரும்பிக் கேட்க" (பாட்டு எண் 54) எனப் பேசுகின்றான். அவனுடைய பேச்சு அவனை நமக்குக் காட்டிக் கொடுத்து விடுகின்றது. இதனை நாடக அங்கதம் (Dramatic irony) என்பர் இலக்கியத் திறனிகள். முத்தநாதன் தன் கருத்தினை முடித்ததைக் கண்ட மக்கள், அரண்மனை முகப்பில் திரளுகின்றனர். அதனைக் குறிக்கவரும் பாவலர், "மெய்ப் பொருள் அரியை முரண் நிறை சிறிய குறுநரி ஒன்று முடுக்கியே கடித்திடும்..." என்று பதைக்கின்றார். அரி, நரி என்ற முரண்தொடைகளும் கடித்திடும் என்ற சொல்லாட்சியும் ஆழ்ந்த பொருளைத் தந்து, இலக்கியச் சுவையை மிகுவிக்கின்றன.

மெய்ப்பொருள் நாயனார் முத்தநாதனின் சூழ்ச்சியால் பொய்யுடலைத் துறந்து மெய்ப்பொருளோடு ஒன்றிவிட்ட நிலையைக் கண்டு மக்கள் பலவாறு பேசுகின்றனர். **கண்டோர் கூற்றாக அமைத்துள்ள பாடல்கள் கழிபேருவகை தருகின்றன. இது சேக்கிழார் பெருமான் காணாத காட்சி என்பதும் இது குடியரசுக் காலப் பண்புகளுக்கேற்பக் கவிஞரால் புதுவதாகப் புனைந்து கொள்ளப்பட்டது என்பதும் குறிப்பிடத் தக்கன.**

சிலப்பதிகாரத்தில் போன்றே, இக்குறுங்காப்பியத்திலும் காப்பியப் புலவர் இறுதியில் நம்முன் தோன்றி, காப்பியக் கதையின் பயனாகச் சில எண்ணங்களை நம் முன் வைக்கின்றார்:

''கள்ளத்தால் விளைந்த தீங்கைக்
காதையால் கேட்ட நல்லீர்!
தெள்ளுற்ற அறிவை நல்கும்
திருமடம், திருவார் கோவில்,
உள்ளுற்ற அடியார் வேடம்
உளஇவை மூன்றும், நன்றாய்
ஒள்ளுற்று வாழ்ந்தால், நன்மை
உளவென உணர்ந்து கொள்வீர்''
(பாட்டு எண், 79)

நூலை முடிக்கும்போது, இன்னதென்று சொல்ல முடியாத இனம் புரியாத-அவலம் நம் உள்ளத்தை நெருடுகின்றது. நம் மனம் தத்தளிக்கின்றது. சான்றோர் களுக்குச் சாக்காடு தான் பரிசா என்று மனம் ஏங்குகிறது:. என்றாலும், இது உண்மையில் சாக்காடு அன்று; நிலையாத உலகத்தில் நிலைபெறும் செயலை அல்லவா நாயனார் செய்துள்ளார்! ''மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே'' என்ப தன்றோ தமிழர்களின் கொள்கை. வள்ளுவர் கூறுகின்றார்

''நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது'' (குறள்).

ஆம்; மெய்ப்பொருள் நாயனார் ஒரு வித்தகர்; இறப்பை வாழ்வாக மாற்றிக்காட்டிய சித்தர்.

இந்த அரிய நூலுக்கு, (அது அளவில் சிறியதாக இருந்தாலும்) அணிந்துரை எழுதும் அளவுக்கு அடியே னுக்குத் தகுதிகள் இல்லாவிட்டாலும், பேராசிரியர் அடிக ளாசிரியர் அவர்களின் அன்புக்கட்டளையை ஏற்று

எழுதினேன். மாணாக்கனாக இருந்த காலத்திலிருந்து பேராசிரியரின் திரு உருவத்தை அகக் கண்களாலும் புலமைத் திறத்தை அவர் தம் நூல்கள் வாயிலாகவும் பருகி வருகின்ற எனக்கு இவ்வாய்ப்புக் கிட்டியது திருவருள் சித்தமே அன்றி, வேறன்று.

"ஞாலம் நின்புகழே ஓங்கவேண்டும்"

புதுவை
14—11—95

அ. பாண்டுரங்கன்

தமிழின் சீர்பரவும்
திருத்தொண்டர்

முனைவர் அ. அறிவுநம்பி
இணைப்பேராசிரியர்
தமிழியல்துறை
புதுவைப் பல்கலைக்கழகம்

புதுவை
25—11—95

* தம் வாழ்க்கையையே தமிழ் வாழ்க்கையாக்கிக் கொண்டவர். குருசாமி என்ற பெயரைத் தமிழாக்கி **அடிகளாசிரியர்** என வாழ்வது ஒரு பதச்சோறு.

* தமிழோடு தன்னைக் கரைத்துக் கொண்ட இந்தச் சந்தனம் **மயிலம்**, **கரந்தை** ஆகிய ஊர்களில் பேராசிரியராகவும் முதல்வராகவும் மணந்து மகிழ்ந்தது.

* சென்னை, தஞ்சைப் பல்கலைக் கழகங்களில் ஆய்வுப் பணியில் முத்திரைபதித்த இந்தச் சான்றாண்மைப் பெருந்தகை படைத்த **'சான்றாண்மை'** நூல் இன்று பல்கலைக் கழகப் பாடநூல்.

* செய்யுள், உரைநடை, புத்துரை, பதிப்பு என **நாற்பத்து நான்கு** நூல்களைத் தந்து தமிழுக்கு வளம் சேர்த்த 86 வயதுப் பேராசான் வீடு வளமாயில்லை. உடலும் நலமாயில்லை. இருப்பினும் கூரை வீட்டில் இருந்த படி தமிழின் சீரைப்பெருக்கும் இந்தத் திருத்தொண்டர் பேரைக் காலம் போற்றும்.

* சிறுவயதில் மேடையில் அரிச்சந்திரன் வேடமிட்ட இவர் பிறர்பொருளைத் தீண்டாத, **'வேடம் போடாத அரிச்சந்திரனாக** வாழுகிறார் .... இன்றும்... என்றும்.

* பத்து நூல்களை உருவாக்கிக், கைப்பொருள் இன்மையால் கட்டிப் போட்டிருக்கும் இவர் தம்வாழ்வு மெய்ப்பொருள் நிறைந்தது. இவரின் இனிய படைப்பில் ஒன்றே இந்த **'மெய்ப்பொருள் காதை'.**

மெய்ப் பொருட் காதை

'மெய்ப்பொருள் காதை' என்பது மெய்ப்பொருளினது காதையை உடையது எனப்பொருள்பட்டுவரும் ஆறாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும். இவ்வாறாம் வேற்றுமைத் தொகை தெரிந்து மொழிச் செய்தியால் வந்தது. தெரிந்து மொழிச் செய்தியாவது தெரிந்தெடுத்த மொழியால் செய்யப்படும் செய்யுளென்க.

தற்சிறப்புப் பாயிரம்

1

தேவாரும் திருவருள்தான் முதலாய் நின்று
திகழ்அறிவை இயக்கிவிடத், "தெய்வம்சான்ற
பூவாரும் நறுந்தேன்போல்" இன்பம் நல்கும்
புதுத்தமிழால் மெய்ப்பொருள்தன் காதை தன்னை
நாவாரும் சுவைபோலக் கேட்போர்க் கெல்லாம்
நற்சுவையைத் தருமாறு நலங்கள் மல்கும்
பாவாலும், பண்ணத்திப் பாட்டி னாலும்
பயன்வழங்கும் உரையாலும் பகர்கின் றேனே.

விளக்கக் குறிப்பு:

இளம்பூரணர் தாழிசை துறை விருத்தம் என்னும் பாவினங்களைப் பண்ணத்திப் பாடல் என்பர்.

மணிமேகலை முதலானவை பாவாலே ஆன இலக்கியம் ஆகும். பெருந்தேவனார்பாரதம் முதலானவை வெண் பாவாலும், உரைச்செய்யுளாலும் ஆனவை ஆகும். நளவெண்பா வெண்பாவாலே ஆனது. நைடதம் பண்ணத்திப் பாடலால் ஆனது. ஆனால், சிலப்பதிகாரமோ பாவாலும், பண்ணத்திப் பாடலாலும், பாங்குடைய உரையாலும் ஆன இலக்கியமாகும்.

'தெய்வம் சான்ற பூ' என்பது தெய்வ உலகத்தில் உள்ள கற்பக மரத்தின் பூக்களைக் குறிக்குமென்க.

'புதுத்தமிழ்' என்பது கன்னித்தமிழ் என்றாற் போல என்றும் தன் சீரிளமைத் திறம் குன்றாமல் உள்ள தமிழ் என்க.

கடவுள் வாழ்த்தும் அவையடக்கமும்

ஆசிரியப்பா.

2

மெய்ப்பொருட் காதைக்கு முதல்வித் திட்டவர்
நற்றமிழ் வல்ல நம்பியா ரூரர்;
அவ்வித் ததுதான் அழகுற முளைக்க
அம்மை வனப்பால் அந்தாதி செய்தவர்
நம்பி யாண்டார் நம்பிஎன் பவரே;
அவ்விரண் டினையும் அகப்படத் தழீஇ
தொன்மை வனப்புத் தோன்றும் வண்ணம்
புராணம் பாடினார் சேக்கிழார் பெருமான்;
தண்டமிழ் சிறக்கும் தஞ்சை நகருள்

பண்டே வாழ்ந்த பலர்புகழ் சோழருள்
இராச இராச எழில்சேர் மன்னன்
பெருவுடை யார்க்குப் பிறங்க அமைத்த
பீடுசால் பெரும்புகழ் பெருங்கோயி லகத்தே
தத்தா நமரே காணெனக் கூறிய
மிலாடுடை யார்க்குத் திருவுரு அமைத்தனன்;
அறிவிற் குறைந்த அடியேன் தானும்
அந்நால்வர் அடிகளை அகத்தில் கருதி
இழுமென் மொழியால் விழுமிய நுவலும்
தோல் எனும் வனப்புத் தோன்று மாறு
மெய்ம்மொருட் காதை என்ற பெயரால்
எளிய இலக்கியம் இயற்றுகின் றேனே.

விளக்கக் குறிப்பு:

நம்பியாரூரர் திருத்தொண்டத் தொகையுள் "வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்" என்ற அடியால் மெய்ப்பொருட் காதைக்கு முதல் வித்திட்டார்.

நம்பியாண்டார் நம்பிகள் தாமியற்றிய திருத் தொண்டர் திருவந்தாதியுள்,

"கற்றநன் மெய்த்தவன் போலொரு
பொய்த்தவன் காய்சினத்தால்
செற்றவன் தன்னை அவனைச்
செறப்புக லும்திருவாய்
மற்றவன் "தத்தா நமரே"
எனச்சொல்லி வான் உலகம்

பெற்றவன் சேதிபன் மெய்ப்பொரு
ளாம் என்று பேசுவரே''

என்னும் பாட்டால் சுருக்கமாக வரலாற்றுச் செய்தியை விளக்கியுள்ளார். சுருக்கம் - அம்மை.

சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்துள் மெய்ய் பொருள் நாயனார் புராணம் என்ற பெயரால் இருபத்து நான்கு பாடல்களைக் கொண்டு இவர் காதையை இயற்றியுள்ளார்.

இராச இராச சோழன் தஞ்சாவூர்ப் பெரிய கோவிலில் தன் கல்வெட்டில் ''**தத்தா நமரே காண்**' என்ற '**மிலாடுடையார்**' என்று மெய்ப்பொருள் நாயனாரைக் குறிப்பித்தான். இத்தொடர்ச் சொல்லால் மெய்ப்பொருள் நாயனாரின் வரலாற்றுக்கு அடியாய் அமைந்த செய்தியைப் புலப்படுத்தியுள்ளான்.

''அறிவிற் குறைந்த அடியேன்'' என்பது அவையடக்கம்.

தோல் என்னும் வனப்பாவது:-

இழும்என் மொழியால் விழுமியது நுவலுதல் என்றும், பரந்த மொழியால் அடிநிமிர்ந்து ஒழுகுதல் என்றும் இரு பகுதியாய் வரும். அவ்விரு பகுதியுள் இம்மெய்ப் பொருட் காதை முதல் பகுதியைச் சார்ந்தது என்க.

3 உரைச் செய்யுள்

அறிஞர் சோற்றை நன்குடைய சோழநாட்டிற்கும் சான்றோரை மிகவுடைய தொண்டை நாட்டிற்கும் நடுவே உள்ளதை நடுநாடென்பர். இந்நாட்டின் மலைப்பகுதியை மலையமான் நாடென்றும், மலாடு மிலாடென்றும், சேதி நாடென்றும் செப்புவர் அறிஞர். மலையமான் நாட்டுள்

மலையூர் முள்ளூராகும். தரையூர் தன்னைத் திருக்கோவலூர் என்பர். அவ்விரு ஊரையும் அடக்கி நின்றியலும் மலைய மான் நாட்டு வளத்தை உரைக்கின்றேன்.

நாட்டுவளம்

மலையமான் நாடெனும் சேதிநாட்டின் சிறப் பினைப் புறநானூற்றுப் பாடலொன்று கீழ்வருமாறு சிறப்பித்துக் கூறும்.

அப்பாடலாவது,

''கடல்கொளப் படாஅது உடலுநர் ஊக்கார்
கழல்புனை திருந்தடிக் காரிநின் நாடே''.

[புறம்: 122]

என்பதாகும். அப்பாடலின் கருத்தைக் குறித்த என் கருத்தினைக் கீழே உள்ள என்பாடல் விளக்கும்.

4

"கழல் புனைந்த அடியுடைய காரியே! உன்றன்
கவினுடைய நன்னாட்டைக் கறுவிமிகச் சீறி
அழலுகின்ற செற்றலரும் அணுகுதற்குக் கருதார்;
அலைகடலும் தீண்டாதென் றரிய
தமிழ்புனையும்;
நிழல்திகழும் இந்நாட்டில் நெய்தல்நிலம் இல்லை
நீண்மலையும் பெருங்காடும் நீர்நிலமும்
உளவாம்
எழில்திகழும் இந்நாட்டில் இருநிலங்கள் திரிந்த
இருபாலை நிலங்களுமே இருக்கின்ற நன்றே".

புறநானூற்றுப் பாடலொன்று 'கடல்கொளப் படா' அது' (122) என்று குறிப்பிடுதலால், காரிநாடாகிய மலையமான் நாட்டில் நெய்தல்நிலம் இல்லை என்க. குறிஞ்சி நிலமும், முல்லை நிலமும், மருத நிலமுமே உள்ளன என்க. குறிஞ்சியும் முல்லையும் திரிந்த இரண்டு பாலை நிலங்களும் உள்ளன. அவற்றுள் **குறிஞ்சித்திணைச் சிறப்பினைத்** தொடங்கி நாட்டு வளத்தைக் கூறுகின்றேன்.

உரைச் செய்யுள்

5 மலையமான் நாட்டுள் குறிஞ்சித்திணை

மலையமான் நாடென்ற பெயரே குறிஞ்சித்திணைப் பெயராகும். எனவே, இந்நாட்டிற்குக் குறிஞ்சித்திணை சிறந்ததென்க. **நற்றிணையில், மலையமான்**, என்ற புலவரொருவர் "பிரசம் தூங்க" (98) என்ற பாடலொன்றைக் கூறி இந்நாட்டின் குறிஞ்சித்திணையைச் சிறப்பிக்கின்றார்.

"பிரசம் தூங்கப் பெரும்பழந் துணர
வரைவெள் அருவி மாலையின் இழிதரக்
கூலம் எல்லாம் புலம்புக நாளும்
மல்லற்று அம்மஇம் மலைகெழு வெற்பெனப்
பிரிந்தோர் இரங்கும் பெருங்கல்நாட".

என்பது அப்பாட்டில் குறிஞ்சித்திணையைச் சிறப்பிக்கும் பகுதியாகும்.

கூலம் பதினெட்டு வகையாகும். அவை நெல், புல், வரகு, சாமை, தினை, இருங்கு, தோரை, இராகி, எள்,

கொள்ளு, பயிறு, உளுந்து, அவரை, துவரை, கடலை, மொச்சை, சோளம், கம்பு.

"பதி னெண் கூலமும் உழவர்க்கு மிகுக" என்ற சொற்றொடரால் கூலம் பதினெட்டாதலை அறிக. எனவே

மலையமான் நாட்டுக் குறிஞ்சித்திணை

பிரசம் தூங்கவும், பெரும்பழம் துணரவும், வெள்ளருவி மாலையின் அதிரவும், கூலம் எல்லாம் புலம்புகவும் விளங்கிப் பிரிந்தோர் இரங்கும் பெற்றியையுடைய தென்க

புறநானூற்றில் 126-ஆம் பாடலானது **நப்பசலையார்**, என்ற பெண்பால் புலவரொருவர் மலையமான் திருமுடிக் காரியைப் பாடிய பாடலாகும். அப்பாடலில் "முள்ளூர்ப் பொருந! புலன் அழுக்கற்ற அந்தணாளனாகிய கபிலன் நின்னை இரந்துசெல் மாக்கட்கு இனி இடனின்றிப் பரந்திசை நிற்கப் பாடினன்" என்று கூறியுள்ளார். அவர் கூறிய கருத்திற்கேற்பப் புறநானூற்றில் கபிலர் திருமுடிக் காரியைப் பாடிய பலபாடல்களை மிகுதியாகக் காணலாம். அவை நிற்க, அக்கபிலர் கலித்தொகையுள் பாடியுள்ள குறிஞ்சித்திணைப் பாடல்களும், பத்துப்பாட்டிலுள்ள குறிஞ்சிப் பாட்டும் **மலையமான் நாட்டின் குறிஞ்சித் திணையைப் பற்றிய பாடல்களாகவே கருத வேண்டியுள்ளன.**

இவையன்றி, தொல்காப்பியம், அகத்திணையியல் 24-ஆம் நூற்பா உரையுள் **இளம்பூரணர்** என்னும் உரையாசிரியர் "விடிந்த ஞாலம்" என்ற பாட்டை எடுத்துக்

காட்டி, இது முதலும் கருவும் புணர்தலாகிய உரிப்பொருள் பற்றி வந்த குறிஞ்சிப் பாடலென்றும், "முதுக்குறைந் தனளே" என்ற பாட்டை எடுத்துக் காட்டி இஃது உரிப் பொருள் ஒன்றுமே வந்த குறிஞ்சிப் பாட்டென்றும் கூறுதலால், இவ்விரண்டு பாடல்களிலும் திருமுடிக்காரி கூறப்படுதலின் இக்குறிஞ்சிப் பாடலும் மலையமான் நாட்டுக் குறிஞ்சித்திணையைக் கூறவந்ததாகும். எனவே, மலையமான் நாட்டுக் குறிஞ்சித் திணையைக் கூறவந்தயான் இக்குறிப்பை அறிஞருலகத்திற்குத் தந்து விட்டுக் குறிஞ்சித்திணையைப் பற்றிய மூன்று பாடல்களை மட்டும் இங்கே கூறுகின்றேன்.

குறிஞ்சித்திணை

6

மலரின் மணமே மல்கியிட
மாண்பார் கனிகாய் நிறைந்திருக்க
உலரா ஊற்றும் உறுசுனையும்
ஓடும் அருவிப் பெருக்காறும்
புலரா மரமும் பொதும்பர்களும்
பொருந்திக் காணப் பொருள்பலவும்
இலரா இருக்கும் மக்களுக்கே
என்றும் கொடுக்கும் குறிஞ்சிநிலம்.

குறிஞ்சி நிலப் பொருள்களாவன:

தேனும், பதினெண் வகைக் கூலமும், பழவகைகளும், மலர்வகைகளும், மரவகைகளுமாம்.

இலரா இருக்கும் மக்கள்- வறியவர்

உ

இறைவன் துணை

மெய்ப் பொருட் காதைச் சுருக்க உரைநடை

நாடும் ஊரும்

பாரத நாட்டின் தென்கோடியில் உள்ளது தமிழக மாகும். அது தொண்டை மண்டிலம், சோழ மண்டிலம், பாண்டிய மண்டிலம், சேரமண்டிலம் என நான்கு பெரும் பிரிவாக இருந்தது. அவற்றுள் தொண்டை மண்டிலத் திற்கும், சோழ மண்டிலத்திற்கும் நடுவண் உள்ள நிலப் பகுதியை நடுநாடென்று வழங்கினர். அந்நடுநாட்டின் மேலைப்பகுதி பெரும்பாலும் மலைகளைப் பெற்றிருந்த காரணத்தால் அதனை மலைநாடு, மலாடு, மிலாடு, மலையமான் நாடு என வழங்கி வந்தனர். அந்நாடு கடலைச் சார்ந்ததாக இல்லாமையால் நெய்தல் நிலத்தைப் பெறவில்லை. குறிஞ்சியும் முல்லையும் மருதமும் ஆகிய இவையே அந்நாட்டின் நிலப்பகுதியாகும். அந்நாட்டில் தென்பெண்ணையாறு பாய்ந்து வளம் செய்கின்றது. அந் நாட்டில் மலையிலுள்ள தலைமையான ஊர் முள்ளூராகும். தரைப்பகுதியிலுள்ள தலைமையான ஊர் திருக்கோவலூ ராகும்.

மலையமான்கள்

மேற்குறிப்பிட்ட மலையமான் நாட்டினைப் பண்டு ஆண்டுவந்த குறுநில மன்னரை மலையமான், மலைய மன்னரென அழைத்தனர். அவருள் தலைவள்ளல் மலையமான் திருமுடிக்காரியும் அவன் மகன் ஏனாதி திருக்கண்ணனும் குறிப்பிடத்தக்கவராவர்.

மெய்ப்பொருள்

மேலே குறிப்பிட்ட தரைஊராகிய திருக்கோவலூரில் வாழ்ந்திருந்து நாட்டினை ஆண்டுவந்த மலையமான் குடியினருள் மெய்ப்பொருள்நாயனார் என்ற பெயருடைய மன்னரொருவர் ஒரு காலத்தில் வாழ்ந்து மலையமான் நாட்டை ஆண்டு வந்தனர். அவர் நல்ல இறைமாண்பு உடையவர்; சிவபக்தி உடையவர்; சிவனடியார் இடத்தே பேரன்புகொண்டவர்.

அண்டை நாட்டு மன்னன்

மெய்ப்பொருள் நாட்டை அடுத்துள்ள அண்டை நாடானது கயமை நிறைந்த நாடாய் இருந்தது. அந் நாட்டை முத்தநாதன் அல்லது முத்தன் என்று பெயர் தாங்கிய குறுநில மன்னனொருவன் ஆண்டு வந்தான். அவனும் கயமை நிறைந்தவன். தன்னலமும் வஞ்சகமும் பெருஞ்சினம் முதலிய தீயபண்புகளும் நிறைந்தவன். மெய்ப்பொருள் ஆண்டுவரும் நாடு வளத்தில் சிறந்திருந்தது. அதனைக் கண்டு பொறாத முத்தன், களவில்வல்ல கயவர்களை அனுப்பிக் களவு செய்து பொருள்களைக் கவர்ந்து கொண்டு வருமாறு ஏவினான். மெய்ப்பொருள் நாட்டு ஒற்றர்கள் களவு செய்யவந்த கயவரை ஒற்றிப்

பிடித்து ஒறுத்து அனுப்பி விட்டனர். கயவர்களால் களவாட முடியாமையைக் கண்ட முத்தன் சினம்கொண்ட வனாய் அண்டைநாட்டவன் ஆகையினாலே எல்லை ஓரத்திலுள்ள மெய்ப்பொருள் நாட்டுள் புகுந்து பொருள் களைக் கொள்ளையடித்துச் செல்லுதல், எல்லை வரம்பு களை அழித்தல் இவைபோன்ற பல தீச்செயல்களைச் செய்யத் தொடங்கினான். மெய்ப்பொருள் நாயனார் வெல்லும் படையை மிக உடையவராதலாலே முத்தன் நாட்டுக் கயவர் செய்யும் அளவற்ற தீங்குகளையெல்லாம் முற்றிலும் முறியடித்து விட்டனர்.

முத்தன் சினங்கொண்டு கருதியது

எந்தவகையிலும் வெல்ல முடியாத முத்தனுக்கு மனக் குமுறலும் சினமும் மிகமிக உண்டாயின. அதனால் வஞ்சகம் மிக்க தீச்செயல் ஒன்றினாலே மெய்ப்பொருள் நாயனாரை அழித்துவிடக் கருதினான். எந்த வகையான சூழ்ச்சியால் மெய்ப்பொருளை அழிக்கலாமென்று முத்தன் ஆராய்ந்தான். மெய்ப்பொருள் நாயனார் சிவனடியார் இடத்தே பேரன்பு கொண்டு அவரிடமுள்ள எந்தவகையான குறைகளையும் கருதாமல் போற்றி வழிபட்டு வருபவர் ஆதலாலே அச்சிவனடியார் வேடத்தைத் தாங்கி அவரிடம் சென்று அவரை அழித்து விடலாம் என்று துணிந்தான்.

முத்தன் சூழ் வினை

முத்தன் தன்தலையில் சடைகளை முடித்துக்கட்டி, அரையில் காவி உடையை உடுத்திக் கொண்டு திருநீற்றை அழகுற அணிந்து கொண்டு உருத்திராக்க மணிவடமும் பூண்டு ஓலைச்சுவடி பலகொண்ட டொதியுள் ஆயுதம் ஒன்றை மறைத்து வைத்து அதனைக் கையில் ஏந்தியவனாய்

மெய்ப்பொருள் நாயனார் வாழும் அரண்மனை முகப்பிற்கு வந்தான். அங்குள்ள காவலர் எல்லாம் சிவனடியார் வேடந்தாங்கி வந்த முத்தனைப் புரிந்து கொள்ளாமல் "இவ் வேடம் எம் இறைவனுக்கு (மெய்ப்பொருள் நாயனாருக்கு) இனிய வேடம்". எனக் கருதிக் கொண்டு அவனை அரண்மனைக்குள் புகுமாறு விடடுவிட்டனர். இடையிலே உள்ள காவல் இடங்களை எல்லாம் இவ்வாறே எளிதில் கடந்து வந்த முத்தன் கடைசியில் தத்தன் என்பவன் காத்து வந்த கடைவாயிலை அணுகினான். அங்குள்ள தத்தன், முத்தனை உள்ளே செல்ல விடாமல் தடுத்து, "எம் இறைவன் அரசியல் காரியங்கள் பலவற்றைச் செய்து முடித்து விட்டு இளைப்படைந்து இப்பொழுது அயர்ந்து உறங்குகின்றார்; விழித்தபின் சென்று காணலாம்" எனக் கூறித் தடுத்து நிறுத்தி விட்டான்.

அப்பொழுது முத்தன் தத்தனைப் பார்த்து, "நாம் எப்பொழுதும் தவத்தினையே செய்து கொண்டிருப்போம்; இப்பொழுது அத்தவத்திலிருந்து சிறிது நீங்கி அரசனுக்கு மெய்ப்பொருள் கூற வந்துள்ளோம். மெய்யைக் கூறவந்த எமக்கு மெய்ப்பொருள் அரண்மனையில் சிறிதும் தடை உண்டாகக் கூடாதே" என்று இனிமையாக மெல்லக்கூறி மெல்ல உள்நுழைந்தனன்.

தத்தன் முத்தனுடைய சிவனடியார் வேடத்திலும் இனிய மென்மையான பேச்சிலும் மயங்கி முத்தனை உள்ளே விட்டுவிட்டான். உள்ளே சென்ற அவன் கஞ்சத் தவிசின் திருஅனைய கற்பின் மனைவி புறம் காப்ப மஞ்சந் தன்னில் துயிலும் மன்னன் மருங்கே வந்து நின்றான். அவனைக் கண்ட அரசமாதேவி அஞ்சி அரசனைத் துயில் எழுப்பினாள். துயில் உணர்ந்த மன்னன் அருகே நிற்கும் சிவவேடத்தைக் கண்டு மயங்கிப் பணிந்தான்.

பணிந்த மன்னனை முத்தன் பார்த்து ''உங்கள் சிவபெருமான் அருளிய ஆகமம் ஒன்றை உனக்கு உபதேசிக்க வந்துள்ளோம். இங்கு இப்பொழுதே தனியிடத்திலிருந்து கேட்கும் முறையில் கேட்க வேண்டும்'' என்று கூறினான். நாயனாரும் அதற்கு இயைந்து தனியான நல்ல இடத்திலே மேடை ஒன்றில் முத்தனை அமரச் செய்து, மலர் முதலான பூசனைப் பொருட்களால் முத்தனைப் பூசித்துக் கீழே விழுந்து தன்னை மறந்து வணங்கினார்.

இத்தகைய காலத்தைக் கொக்கைப்போலக் கூர்ந்து எதிர்பார்த்துக் கொண்டிருந்த முத்தன், சுவடிப் பொதியை அவிழ்த்து அதனுள் ஒளித்து வைத்திருந்த கொல்லும் படையை எடுத்து நாயனாரின் புறங்காட்டாத முதுகில் எறிந்தான்.

எதிர்பாராத அத்தீய நிகழ்ச்சிக்கு நாயனார் சிறிதும் அச்சங் கொள்ளாதவராய் ''அரகர சிவனே'' என்று உரத்த குரலில் முழங்கினார். அப்பொழுது அங்கேயே மனம் வைத்திருந்த தத்தன், இவ்வோசையைக் கேட்டு அவ் விடத்திற்கு விரைந்தோடி வந்தான். வந்தவன் அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சியைப் புரிந்து கொண்டு, முத்தனை ஓறுக்க முற்பட்டான். அதனை உணர்ந்த நாயனார் தத்தனை நோக்கி, ''பொறுக்க வேண்டும் நல் தத்தா! இவர் நமக்குப் பொருந்தும் நமரே காண்; அதனால் கறுக்கச் சினங் கொள்ளாதே;அதற்குப் பதிலாக; கருணை ஒன்றையே தாங்கி இவரைப் புறத்தே நின்று காத்து, நம்தமர் செய்யும் தீங்குகளையெல்லாம் நீக்கி, அவர் வேண்டும் பாது காவலான இடம்வரை நீ துணையாகச் சென்று விட்டு வருக'' என்று கூறினார்.

மேலும், அவர் தத்தனைப் பார்த்து, "அறிவில்லாத கொடியோர் தம்உள்ளம் கோடி தீங்கிழைத்தால் அறிவுடைய நல்லோரும் அவர் போலத் தீய செயல்களையே செய்ய வேண்டுமா? அதற்குப் பதிலாக அத்தீயோர் செய்த தீங்கினை அறவே மறந்து, அவர்க்கு நன்மை செய்யக் கூடாதா? யான் விரும்பியதையே செய்யும் பணியாளனாகிய உண்மைத் தத்தனே! பேயைக் கண்டாற்போல அஞ்சத்தக்க இந்த நம்தமரை நன்கு காத்து, நல்லிடத்தே அடையச் செய்து, அதனை நாம் கேட்டு அமைதி பெற்று உயிர் நீங்குமாறு, நீ விட்டு வந்த செயலை எமக்கு அறிவிக்க வேண்டும். இது நீ எமக்குச் செய்ய வேண்டிய முதற்பணி" என்று ஆணையிட்டார்.

இந்த நிலையில் இச்செய்தியை அறிந்து கொண்ட நகர மக்கள் எல்லோரும் அரண்மனை முகப்பில் வந்து கூடிவிட்டனர்.

தத்தன் செயல்

மன்னவன் ஆணையிட்ட முதற்பணியை நன்கு முடிக்கக் கருதிய தத்தன், முன்னே முதலில் முத்தனைக் காக்கும் கவசம் போல் இருந்து கொண்டு, தன்னை நோக்கி வந்த எல்லா மக்களுக்கும் அரசன் ஆணையை அறிவுறுத்தி அவர்களைப் போக்கி விட்டு, முத்தனை இடர்புகா இடத்திற்குக் கொண்டுபோய் விட்டுவிட்டு, விரைந்து வந்து அச்செய்தியை அரசனிடம் அறிவித்தான்.

இறுதிக்காலத்தில் மெய்ப்பொருள் கூறிய மெய் மொழி

தத்தன் கூறிய மொழியைக் கேட்ட மெய்ப்பொருள் மனக்குறை எதுவும் இன்றி நல்ல அமைதியை அடைந்தார்.

அந்த நிலையில் அங்கே சூழ்ந்துள்ளோரை நோக்கி "பகைத்துத் தீங்கு புரிவோரைப் பகைவர் என்றே கருதி விடாமல் நண்பராகக் கருதும் பண்பு நம்மிடம் தோன்று மாயின், நாட்டில் கலகமும் போரும் உண்டாகாதே; அவை உண்டாகாமல் இருப்பின், நாடு நல்ல அமைதியைப் பெற்று வாழும். இத்தகைய உயர்ந்த நிலையைப் பெறுவதற்குப் 'பகை செய்தார்க்குப் பகையே செய்ய வேண்டும் என்று எழும் உள்ளப் பண்பை மாற்றி வெல்லும் ஆற்றலை எல்லோரும் பெறவேண்டும். 'மேலும் மெய்மையும் அறிவும் இன்பமும் உடைய மெய்ப்பொருள் என்னும் சிவபரம் பொருளைப் பற்றிப், பொய்ப்பொருள் பற்றினை நீக்கி, நல்ல திருநீற்றினை அணிந்து வாழும் சிவனடியாரைக் காணில் அவரை அச்சிவபரம் பொருளாகவே. கருதிப்பணிந்து வாழ்க" என்று கூறினார்.

மெய்ப்பொருள் நாயனார் சிவப்பேறு

நாயனார் மெய்ப்பொருளை இவ்வாறு வழங்கியபின் தம் மனத்தில் பொய்ப்பொருள் எதையும் கருதாமல், திருச் சிற்றம்பலத்தில் வாழும் மெய்ப்பொருளாகிய சிவம் ஒன்றையே கருதிக் கொண்டு, தன்மூச்சுக் காற்று நீங்கப் பெற்று, சிவப்பேறு அடைந்தார்.

இந்நிகழ்ச்சியை கண்டோர் பலரும் பலவாறு கூறிய கருத்துரைகளைக் கண்டோர் கூற்று என்னும் பகுதியுள் காண்க.

* * * *

இலக்கிய அறிமுகம்

இன்னா செய்தாற்கும் இனிமையே செய்திட்ட
தன்னே ரில்லாத தலைமகன் மெய்ப்பொருள்
அன்னான் வரலாற்றை அறிய உரைக்கின்ற
சின்னஞ் சிறிய சிறப்பான காதையைப்
பிழையின்றிக் கற்றுப் பெரிதும் பொருள் உணரின்
பகைத்தவர் தங்கட்குப் பகையே புரிகின்ற
பண்பற்ற உள்ளம் படைத்தவர் தாமெல்லாம்
அன்பும் அறிவும் அகத்தே வளர்ந்திருக்க
நண்பரே ஆகி, நலமே புரிகின்ற
பண்புடைய ராவோர் பலர்.

முடிபு:-

குறிஞ்சி நிலமானது மலர்மணம் மல்கியிட, கனிகாய் நிறைந்திருக்க, ஊற்றும், சுனையும், அருவியும், ஆறும், மரமும் பொருந்திக் காணும் பொருள் பலவற்றையும் இலராய் இருக்கும் மக்களுக்குக் கொடுக்கும் சிறப்பினை உடையதென்க.

7

நெய்தலில் மருத முல்லையுள் தோன்றி
நிகழ்வுறும் கருப்பொருள் யாவும்
பையவே காலும் அரையும்முக் காலும்
பான்மையால் வீரியம் பெறுமே
பெய்யும்நன் முகில்சேர் குறிஞ்சிவாழ் பொருளே
பெற்றிடும் முழுத்திறன்; அதனால்
உய்வுறக் குறிஞ்சி உயர்பொருள் கொண்டே
உறுபிணி அகற்றுவர் உயர்ந்தோர்.

அகத்தியர் பரிபூரணம் என்னும் சித்தர்நூல் மருந்துப் பொருள்களாகப் பயன்படும் மரம், செடி, கொடி, புல் முதலானவற்றின் வேர், பட்டை, இலை, பூ, காய், கனி முதலானவற்றை மலையாகிய குறிஞ்சி நிலத்திலிருந்து கொள்வனவே முழுவீரியம் உடையனவா இருக்கும் என்றும், நெய்தல், மருதம், முல்லையுள் தோன்றியவை முறையே கால், அரை, முக்கால் வீரியங்களையே பெற்றிருக்கும் என்றும் கூறும்.

ஔவைப் பாட்டும் "மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்" என்று கூறும்.

2

8

அளப்பரும் அளவும் பொருள்களும் பொருந்த
அசைவறும் நிலையினைப் பொருந்தித்
"துளக்கமில் லாமல் துரிசற விளங்கும்
தூயநற் குரவனைப் போல"
இளக்கம துடைய வறண்டகா லத்தும்
இணையறும் பொருள்களைப் பிறர்க்குக்
கொளக்கொளக் கொடுக்கும் குறிஞ்சியின்
இயல்பைச்
கொண்டது மலையமன் நாடே.

நன்னூலில் ஆசிரியன் இலக்கணம் கூறுமிடத்து மலையை ஆசிரியனுக்கு ஒப்பிட்டுக் கூறி,

"அளக்க லாகா அளவும் பொருளும்,
துளக்க லாகா நிலையும் தோற்றமும்,
வறப்பினும் வளந்தரும் வண்மையும்
மலைக்கே"

என்று ஓதியுள்ளதை உணர்க.

முல்லைத்திணை [இருத்தல் பொருள்]

9

காதலன் பிரியின் கலங்கிகை யற்றுக்
கவலையில் மூழ்கிடா திருந்தே,
"ஓதலில் சிறந்த அறிஞரைப் போல"
உளமெலாம் காமமே இன்றி
ஆதலைக் கருதி மனைச்செயல் அனைத்தும்
அறிவினால் நலம்வர இயற்றிக்

கோதற வாழும் குலமடந் தையர்தம்
கொள்கையில் சிறந்தது முல்லை.

"ஓதலில் சிறந்த அறிஞர்" என்றது, அறிவரை. அவரியல்பை,

"வழுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்"

[தொல். புறத்திணையியல் - 14]

என்பதால் உணர்க.

10

ஆனிளங் கன்றும் மானிளங் கன்றும்
அன்புடன் அணுகிமேய் புறவில்
கானமர் வழியில் நடப்பவர் செல்லின்
கசிவுறும் இன்சொலால் கரைந்து
தேனமர் தமிழ்போல் நலம்பல திகழும்
தீஞ்சுவை மோரொடும் கூட்டி
வானமர் வரகுச் சோற்றினைத் தந்து
வழிநடை இளைப்பினைத் தீர்ப்பார்.

வழியிடத்தே சுமைதாங்கி வைத்தும், நிழல் மரம் வைத்தும், தண்ணீர்ப்பந்தல் வைத்தும் வழிநடப்பவர் களுக்கு உதவி செய்தல் தமிழர் பண்பாடென்க.

இளைப்புடன் நடந்து வந்த ஔவைக்குப் பூதன் என்பவன் சோறு கொடுத்து இளைப்பை நீக்கிய செய்தியை,

"வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
மொரமொரென வேபுளித்த மோரும் -
திரமுடனே

வெண்ணையூர்ப்பூதன் விரைந்துபரிந்
திட்டசோறு
எல்லா உலகும் பெறும்.”

என்னும் இப்பாட்டால் உணரலாம்.

11

மான்படு கானத் துள்ள
மலிபசும் புல்லை மேய்ந்தும்
மீன்படு கான யாற்றுள்
மேம்படு புனலை உண்டும்
ஆன்படு நிரைக ளெல்லாம்
அளக்கர்போல் பாலை நல்க
மேம்படு தயிர்மோர் வெண்ணெய்
மேவின அமிழ்தம் போன்றே.

‘அளக்கர்’ என்றது திருப்பாற்கடலை. அக்கடல் நல்கிய அமிழ்தம் போல் விளங்கின தயிரும் மோரும் வெண்ணெயும்.

அமிழ்தம் என்பது மக்கள் இறப்பினை அடையாமல் நீண்டகாலம் வாழ்வதற்குரிய மருந்தாகும். தயிரும், மோரும், நெய்யும் அம்மருந்துபோல் விளங்கித் தம்மை உண்டவர்க்கே நீண்ட வாழ்வைத் தருமாதலில் அமிழ்தம் போன்றன.

மருதத்திணை

12

உணவினை விளைப்ப தற்கே
ஒருமுத லாகி, நாளும்
அணைவுறும் மக்கட் கெல்லாம்
அருந்திடக் குளித்து வாழ

இணையறு புனலை நல்கி,
எழில்பெறும் பெண்ணை யாற்றால்
பணைவளம் பெற்ற தம்மா
பார்புகழ் சேதி நாடே.

பெண்ணையாற்றுப் புனலானது உணவுப் பொருளை உண்டாக்குவதற்குக் காரணமாக இருத்தலோடு அமை யாமல், மக்களெல்லாம் அருந்தி வாழவும், குளித்துப் புறந்தூய்மையைப் பெற்று வாழவும் உதவுகின்றது.

மருதத்திணை

(உரிப்பொருள் - ஊடலும் ஊடல் நீங்கிக் கூடலும்)

13

அன்பின் ஐந்திணை மறைவழி
இயங்கிடும் ஆர்வலர் தாமெல்லாம்
இன்பம் நல்கிடும் கற்பியல்
நெறியிடை இயங்கிடும் அக்காலை
"துன்பம் நீங்கிடப் பசித்தபின்
உண்டிடும் தூயவர் தம்போல"
நண்பு தங்கிட ஊடியே
இருந்துபின் நசையுறப் புணர்வாரே.

அன்பின் ஐந்திணைமறை என்பது களவொழுக்கத்தை, அக்களவு நிகழ்ந்தபின் கற்பியல் நிகழுமென்க. அக்கற்பியலில் தலைவனுக்கும் தலைவிக்கும் ஊடலும், ஊடியிருந்து கூடலும் நிகழுமென்க. 'ஊடியிருந்து கூடலானது' பசித் திருந்து உண்ணும் உணவைப் போன்றதென்க.

14

‘அறத்துடன் அன்பும் ஆர்வமும் அருளும்
அமைவுறக் கூட்டினாற் போல,
திறத்தியல் நெல்லின் சோற்றுடன் பாலும்
தீஞ்சுவைக் கட்டியும் நெய்யும்
சிறப்புறச் சேர்த்த திரள்பல வற்றைச்
சிறப்பிலாப் பிறவியிற் பிறந்தே
வறத்தினில் வாடும் வறியவர்க் கெல்லாம்
வானென வழங்குவர் பெரிதே.

உயர்ந்த நெல்சோற்றுடன், பாலும், வெல்லக்கட்டியும் நெய்யும் பக்குவமாய்ச் சேர்த்துச் செய்த சோற்றுத்திரள் என்க. அச்சோறு உயர்ந்த சத்துவ குணத்தைத் தரு மாதலின் அவை அறமுடன். அன்பும், ஆர்வமும், அருளும் சேர்ந்தாற்போல் விளங்குகின்றன.

உரைசெய்யுள்

15

திருவள்ளுவர் “தள்ளா விளையுளும்
தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு”
(குறள் 731)

என்னும் குறளால் கெடாத பொருள்களை விளைவிக்கும் தொழிலாளரும், தகுந்த அறிவுடையவராகிய கற்றோரும், குறைவில்லாத செல்வமுடையவரும் ஆகிய இம்மூவரும் சேர்ந்து வாழ்வதே நாட்டிற்குச் சிறப்பைத் தருமென்று கூறுகிறார். அவருள் பொருள்களை விளைவிக்கும்

தொழிலாளரே முதல்வர் என்க. அம்மூவரின் சிறப்பை முறையே கூறுகின்றேன்.

எனவே, தொழிலும், அறிவும், வளமும் ஆகிய மூன்றும் நாட்டிற்கு உயிர் என்க.

செயப்படு பொருளைச் செய்யும் முதலாமவராகிய தொழிலாளரின் சிறப்பு

16

எழுவாயாம் முதல்வனுக்கே இடையீடே இன்றி
இரண்டாக அமைந்ததுதான் இயற்று
கின்ற பொருளே
வழுவாத அப்பொருளை உலகமக்கள் தமக்கு
வழங்குபவர் தொழில்செய்வோர்
ஆதலினால் அவர்தாம்
நழுவாத உழவர்களும் கைவினைஞர் தாமும்
நாட்டினுக்கே முதலாக நண்ணுவர்
ஆதலினால்
பொழுதாக்கும் திங்களொடு கதிரவனைப்
போன்றே
பூமிதனில் பூசித்துப் போற்றுதற்கே உரியர்
எட்டு வேற்றுமைகளை முறைப்படுத்தும்போது இலக்கண நூல்களெல்லாம் முதலிலே எழுவாய் வேற்றுமையையும், அடுத்து இயற்றுகின்ற பொருளாகிய செயப்படு பொருளையும் வைத்துக் கூறும் எனக, அதனால் செயப்படு பொருளின் சிறப்பினை உணர்க. அச்சிறந்த செயப்படு பொருளைச் செய்வோர் தொழிலாளர் என்க. அவர் உழவரும் கைவினைஞரும் ஆவர். அவ்விருவரும் ஞாயிறும்,

திங்களும் போன்றவர் என்க. **பாரதியாரும்** "உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று கூறுவதால், இவர்களை இரு சுடர்களைப் போலக் கருதிப் போற்ற வேண்டும் என்க.

இரண்டாமவராகிய தக்கோர் என்னும் கற்றோர் சிறப்பு

17

இயல்பான நுண்ணறிவும் நூலறிவும் பெற்ற
ஏற்றமுள தக்கோராம் பேரறிஞ ரெல்லாம்
அயல்வாழும் உலகமக்கள் அகத்தையெலாம் திருத்தி
அன்புடைய அறிவினராய் ஆக்குகின்ற திறனால்
"பெயல்வாழும் விளைநிலம்போல்", உலகர் நலம் பெற்றே
பெருமைசெறி நன்னெறியில் பிறழாமல் இயங்கி
உயலான அறத்தினொடு பொருளை இன்பம்
தம்மை உறுதிபெறப் பெற்றனராய் ஒற்று மையாய் வாழ்வர்.

17

வேதாந்திகள் இயல்பான நுண்ணறிவைச் சொரூப ஞானம் என்றும், நூல் விசாரணையால் உண்டாகும் அறிவை விருத்திஞானம் என்றும் இருவகையாகக் கூறுவர்.

''சொரூபஞானமும், விருத்திஞானமும் என்று சோதி ஞானமும் இரண்டாம்'' [எண்-28 சந்தேகம் தெளிதல்;] என்று கைவல்லியம் கூறுவதை உணர்க.

மூன்றாமவராகிய செல்வரின் சிறப்பு.

18 வளத்தினை மிகவும் பெற்ற
வான்புரை செல்வ ரெல்லாம்
உளத்தினில் அருளைப் பெற்றே
உலகெலாம் நலங்கள் ஓங்க,
வளத்தினைப் பெறாமல் வாடும்
வறியவர் தங்கட் கெல்லாம்
உளத்தினில் உவகை ஓங்க
உதவியே உவப்பர் கண்டீர்

வான்புரை செல்வர் - கைமாறு கருதாத வானம் போன்ற செல்வர் என்க.

உதவி செய்து உவப்பது உயர்ந்தோர் செயல் என்க. ''பிறர் வறுமை நோக்கின்றவன் கை வண்மையே'' என்னும் புறப்பாட்டை நோக்குக,

இதுவும் அது

19 செல்வம் என்பது செலவிடற்
காகவே; சேர்த்துவைப் பதற்கன்றே;
நல்ல செல்வத்தைச் செலவழிக்
காமலே நசையினால் வைத்திட்டால்

ஒல்லு மாறுசெல் பொதுநல
ஊர்தியை ஒடுக்கிவைத் திடல்மானும்
நல்ல ஆற்றினில் செலவிடும்
செல்வரே நாட்டிலுள் ளனரம்மா!

விளக்கக் குறிப்பு:

செலவழிக்க ஏற்பட்ட செல்வத்தை அதன் மேல் வைத்த பற்றால் பயன் தராதபடி சேர்த்து வைத்து, அதன் போக்கைத் தடுத்து நிறுத்தி விட்டால், பொதுநல ஊர்தியைத் தடுத்து நிறுத்தி வைக்கும் தீய செயலுக்கு ஒப்பாகும்.

பொது நல ஊர்தியாவன:- புகைவண்டியும், உந்து வண்டியும், கப்பலும், வான ஊர்தியும் முதலானவையாகும்.

நல்ல ஆறாவது, அறம், பொருள், இன்பம் உண்டாக்கும் நெறியை,

"செல்வத்துப் பயனே ஈதல்" (189) என்னும் புறப் பாட்டை நோக்கி உணர்க.

20

நாடும் காடும் அவலும் மிசையும்
நான்கும் ஒன்றே; நல்லோர்தாம்
கூடும் இடமே நல்லிட மென்று
கூறும் அவ்வை சொற்கேற்ப
நாடே முதலா நான்கி னிடத்தும்
நல்லோர் வாழ்ந்து நலஞ்செயலால்
கேடே யின்றிக் கேண்மை விஞ்சக்
கேளிர் ஆகி வாழ்வாரே.

"நாடாகு ஒன்றோ காடாகு ஒன்றோ
அவலாகு ஒன்றோ மிசையாகு ஒன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே". (157)

என்னும் புறநானூற்று ஔவைப் பாடலைக் கருதுக.

அவல் — பள்ளம்

மிசை — மேடு.

21

ஆறுடன் குளமும் ஏரியும் அருகே
அமைந்தவாய்ப் புனிதம்நல் கிடவும்
தேறிய அறிவின் கல்விவல் லவர்தாம்
தெளிந்தநல் வாய்மையைத் தரவும்
ஏறிய இரண்டால், புறமொடு அகமும்
ஏற்றமாய்த் தூய்மையைப் பெற்றோர்
ஊறிடும் அன்பை அறத்தொடும் பெற்றே
உலகிடை உயர்ந்துவாழ் வாரே.

புனல் புறத்தூய்மையை ஆக்கும். வாய்மை அகந் தூய்மையை ஆக்கும். ஆதலால் இவ்வாறு கூறப்பட்டது.

ஆறோ. குளமோ. ஏரியோ ஊர் அருகே அமைந்திருக்க வேண்டும் என்க.

நகரச் சிறப்பு

(திருக்கோவலூர் நகரம்)

22

பாவெனற் குரிய பொருள்நலம் பெற்றுப்
பாக்கள்தாம் பொலிவதே போல
கோவெனற் குரிய குணநலம் பெற்றோர்
கோர்வையாய் வாழ்ந்திடும் சிறப்பால்
நாவினுக் கினிய புகழெலாம் நண்ணை
நானிலம் தன்னிலே சிறந்து
தேவினுக் குரிய திருவெலாம் பெற்றுத்
திகழ்வது கோவலூர் நகரம்.

அறம், பொருள், இன்பம் என்னும் பொருள்களைப் பாவி நடத்தலால் 'பா' எனப்பட்டது. சிலர் பரந்துபட்ட ஓசையுடையது 'பா' என்பர். இது தொல்காப்பியர் கருத்தன்று, என்பதைத் தொல்காப்பியம் செய்யுளியல்

அந்நிலை மருங்கின் அறம்முதல் ஆகிய
மும்முதல் பொருட்கும் உரிய என்ப (102)

என்னும் நூற்பாவுக்குள்ள **இளம்பூரணர்** உரையை நோக்கி உணர்க.

கோவெனற் குரிய குணநலம் பெற்றோர்
கோர்வையாய் வாழும் காரணத்தால்
கோவலூர் எனப் பெயர் பெற்றது என்க.

நகர மக்கள்

23

அடியான முதற்பொருளை ஆக்குகின்ற செயலும்,
அப்பொருளைப் பண்படுத்தி மக்களுக்கே
உதவும்
துடியான நற்செயலும், துணையாக அமையத்
தோன்றி நிற்கும் இருபொருள்கள்
துணையாகப் பொருந்த
நெடிதான அறச்செயல்கள் பலவற்றை இயற்றி
நீண்டநாள் நோயின்றி நேர்மையுடன்நின்றே
படிமீதில் வாழ்வாங்கு வாழ்ந்திருந்து பின்னர்
பரலோகப் பெருவாழ்வில் படிந்திருப்பர்
கண்டீர்

இருபொருள்களாவன மூலப்பொருள்களும், அப்பொருளைக் கொண்டு இயற்றப்படும் செயற்கைப் பொருள்களும் ஆகும்'

"வையத்துள் வாழ்வாங்கு வாழாதவர் நரகம் பெறுவர்' 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவரே வானுலகம் பெறுவர். என்பது கருத்தாம்.

புறநகரும்– அரணும்– அவ்விரண்டினுக்குள்
அமைந்த அகநகரும், அகநகருள் அமைந்த
அரசமாளிகையும் விளங்குதற்கு உவமை

24

அறவகையும் நற்பொருளும் அமைந்து சூழ
"அன்புவளர் அகத்திணைதாம் அமைந்
தாற் போல"

புறநகரும் நல்லரணும் முறையே சூழப்
பொருள்நிறையும் அகநகர்தான்
பொருந்தி நிற்கும்;
மறவகைய வெட்சிமுதல் திணைகள் சூழ
மன்னிநிற்கும் வாகையெனும்
திணையைப் போலத்
திறவகைய திருமனைகள் சூழ்ந்து நிற்கத்
திருக்கோவின் பெருமனைதான் திகழும்
நன்றே.

விளக்கக் குறிப்பு:-

அறமும், பொருளும் பொருந்த அகத்திணை விளங்குகின்றாற்போல, புறநகரும், அரணும் சூழ, அகநகர் விளங்குகிறது.

வெட்சி முதலான புறத்திணைகள் சூழ வாகைத்திணை விளங்குகின்றாற் போல அமைச்சர் முதலானோரின் மனைகள் சூழ, அரசன் வாழும் அரண்மனை விளங்குகிறது.

இவ்விரண்டு உவமையையும் தனித்தனியாகப் பொருள் கொள்க.

மெய்ப்பொருள் பிறப்பு.

25

புலனுழு துண்ணும் புலவர்தாம் பசிப்பின்
புசித்திடும் தம்பொருள் தமையும்
நலமுறப் பகுத்து நல்கிடும் பண்பின்
நலன்நிறை மலயமான் குடியுள்,

நிலமிசை மக்கள் நலனையே கருதும்
நினைவினன்; தன்நலக் கருத்தின்
சலமுறு செயலால் பொருள்செயக் கருதாச்
சால்பினன்; ஒருவன்வந் துதித்தான்.

விளக்கக் குறிப்பு:-

"புலனுழு துண்மார் புன்கண் அஞ்சித் தமதுபகுத் துண்ணும் தண்ணிழல்" என்னும் (46) புறப்பாட்டை நோக்குக.

மெய்ப்பொருள் என்னும் பெயர்க்காரணம்

26

மெய்ப்பொருள் நலமும் பொய்ப்பொருள் தீங்கும்
மேவுநல் அறிவினால் கருதிப்
பொய்ப்பொரு ளதனில் பற்றிலா திருக்கும்
புனிதமே நிறைந்தவன்; என்றும்
மெய்ப்பொருள் தனையே மிகமிகக் கருதி,
மேன்மையாம் அதனியல் கூறி,
எய்ப்பிலா அதனின் பணியையே இயற்றி,
எய்தினன் மெய்ப்பொருள் பெயரே.

விளக்கக் குறிப்பு:-

வடநூலார் பொருளை வஸ்த்து என்று கூறுவர். அழிவற்ற பொருளை நித்திய வஸ்த்து என்றும், அழியும் பொருளை அநித்திய வஸ்த்து என்றும் இருவகையாகக் கூறுவர்.

திருக்குறள் (251) மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தே அழியும் இயல்புடைய பொய்ப்பொருளைப் பொருள் அல்லாதவை என்று கூறி, அதனைப் பற்றி ஒழுகினால் பிறப்புண்டாகும் என்று கூறுகிறது. இது பொய்ப்பொருள் தீங்காகும்.

அடுத்து, "கற்றீண்டு" (356). "ஓர்த்துள்ளம்" (357) "பிறப்பென்னும்" (358) என்கின்ற மூன்று குறள்களால் மெய்ப்பொருளைக் கற்று, ஓர்ந்து உணர்வதால் பிறப் பென்னும் பேதைமை நீங்கும் என்று கூறுகின்றது. இது மெய்ப்பொருள் நலமென்க.

மெய்ப்பொருளாவன

இது மெய்ப்பொருள், உள்பொருள், செம்பொருள் என்று பெயர் கூறப்பட்டு விளங்கும். அப்பொருள் தோற்றக் கேடுகள் இன்மையின் நித்தமாய், நோன்மையால் தன்னை ஒன்றும் கலத்தல் இன்மையில் தூய்தாய் விளங்கித் தான் எல்லாவற்றையும் கலந்து நிற்கின்ற முதற் பொருளாகு மென்றும் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல் பற்றி அதனைக் செம்பொருள் என்றார் என்றும் பரிமேலழகர் கூறுவர்.

(குறள் உரை - 358)

மெய்ப்பொருள் நாயனார் மாண்பு

27

மக்களுக் குண்டாம் தீங்கைமுன் உணர்ந்தே
மாற்றிடும் அரியநன் மாண்பும்,
திக்குள அவரின் குறையையும் உணர்ந்தே
தீர்த்திடும் தெய்வநன் மாண்பும்,

எக்கரு மத்தும் இயலுவோர் திறனை
எண்ணியே உணர்ந்திடும் மாண்பும்,
மிக்கிருத் தலினால் அவன்திரு நாடு
மேன்மையை மேவிவாழ்ந் ததுவே.

விளக்கக் குறிப்பு:-

மாண்பு - நற்செய்கையும், நற்பண்பும்.

28

அறம்விளைக்கும் துறைதோறும் அயராமல்
முன்நிற்பான் அன்பில் மிக்கான்
மறம்விளைக்கும் துறைகளிலும் அறம்
விளைக்கும்
அருளாளன் மறத்தில் வல்லோன்
திறம்விளைக்கும் உலகியலின் திறனெல்லாம்
நன்கறியும் திறமை பெற்றோன்
பிறர்விளைக்கும் தீங்கெண்ணான் பிறர்நலமே
கருதுகின்ற பெரியோன் அம்மா.

29

அழுக்கறத் துவைத்து வெயிலினில் உலர்ந்த
அழகுவெண் பஞ்சுடை அணிவான்
இழுக்கறும் மொழியை இனிமையாய்
மெய்யாய்
இசைத்திடும் இனியசொல் அழகன்

வழுக்கறப் பிறர்க்கு நலத்தையே வழங்கும்
வான்புரை வாகைசேர் தொழிலான்
ஒழுக்கமே உருவாம் மெய்ப்பொருள்
மாண்பால்
உயர்நலம் பெற்றதிவ் உலகே.

மெய்ப்பொருள் நாயனாரின் உள்ளப் பாங்கு

30

நாட்டை ஆள வந்துவிடில்
நாட்டு மக்கள் நலமன்றி
வீட்டு மக்கள் நலமெதையும்
விரும்பிக் கருதார் அறிவுடையோர்;
தேட்டம் மிக்க மெய்ப்பொருளின்
திருவார் உளத்தைத் திறந்தக்கால்
நாட்டு மக்கள் நலமொன்றே
நன்றாய், முறையாய் நனிவிளங்கும்.

மெய்ப்பொருள் நாயனாரும் அவரோடு மாறுபட்ட முத்தனும்

31

இத்தகைய மெய்ப்பொருளாம் இறைவன் றன்னை
ஏற்றமிகு நல்லுயிராய்க் கொண்ட தாலே
ஒத்திருக்கும் நாட்டவர்தாம் உறவே ஆகி,
உள்ளத்தில் சிறுபகையும் உறாமல் நின்றார்;

விளக்கக் குறிப்பு:-

பொத்துடைய தீமனத்தன் பொறாமை மிக்கோன்
புடைநாட்டுள் ஒவ்வாத கொடுங்கோல்
மன்னன்
முத்தனெனும் பெயருடையோன் முடிவில் லாத
முனிவுடையோன் மெய்ப்பொருளை
முனிந்து நின்றான்.

ஒத்திருக்கும் நாட்டவர்தாம், என்பது பற்றிய விளக்கம்.

திருக்குறள் பொருட்பாலின் ஈற்றிலுள்ள குடிமை முதலிய பதின்மூன்று அதிகாரங்களும் குடிகளைப் பற்றியன என்ற கருத்தால், திருவள்ளுவ மாலையில் (26) **போக்கி யார்** என்னும் புலவர் "குடிபதின்மூன்று" என்று கூறி யுள்ளார். அப்பதின்மூன்றுள் குடிமை, மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நாண் உடைமை, குடிசெயல் வகை, உழவு என்னும் இவ்வெட்டும் **ஒத்திருக்கும் குடிமக்களுக்கே** உரியனவாகும். நல்குரவு, இரவு' இரவச்சம், கயமை என்னும் இந்நான்கதிகாரங்களும் **ஒவ்வாத குடிமக்களுக்கே** உரியனவாகும். நன்றியில் செல்வம் என்னும் ஓர் அதிகாரம் **இருபகுதியார்க்கும்** உரியது. இப்பதின்மூன்றும் ஒத்திருக்கும் நாட்டுமக்களுக்கும், ஒவ்வாத நாட்டு மக்களுக்கும் உரியனவாய் வருதலின் குடிமக்கட்கு உரியனவாயின. இக்கருத்தறியாத **பரி மேலழகர்** இப்பதின்மூன்றை ஒழிபியல் என்று பெயர் கொடுத்து ஓதுவர். படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறுள் இப்பதின்மூன்றும் 'குடிகள்' பற்றி யனவாகும்.

நம்பியாண்டார் நம்பிகள், "காய் சினத்தால் செற்ற வன்" என்று சினத்தைச் சிறப்பித் தோதியதால் அதனைக் கருதி "முடிவில்லாத முனிவுடையோன்" என்று முத்தன் இங்கே குறிக்கப்படுகின்றான்.

முத்தன் முனிந்து நின்றதற்குக் காரணம்

32

முனிவதற்குக் காரணம்தாம் எவையோ என்னில்,
முனிவுடனே பழகியதும், அதற்கு மேலே
இனிமையிலாப் பொறாமையினோ டியைந்து நின்றே
எப்பொழுதும் தன்னலத்தோ டிருப்ப துவும் ஆகும்,
அனையதொரு நிலையின்றி அவன்றன் நாட்டில்
அமைதியிலை, அறிவுநிலை வளர வில்லை,
தினையளவும் பிறர்நலத்தை எண்ணிப் பார்க்கும்
திறனுடைய மக்களிலை; தெளிவும் இல்லை.

விளக்கக் குறிப்பு:-

முத்தனிடத்தும் நற்பண்பு இல்லை. அவன் நாட்டு மக்களிடத்தும் நற்பண்பு இல்லை. அந்த இரண்டு காரணத்தாலே மெய்ப்பொருளை முனிந்தான்.

நாட்டை ஆள வருவோரின் தகுதியில்லா எண்ணமும், செயலும் அவருள் ஒருவன் முத்தன் என்பதும்.

33

நாட்டினை ஆளும் நன்னிலை பெற்றோர்
நாட்டு மக்கட்கு நலஞ்செயல் வேண்டும்;
அந்த எண்ணமே அவர்அகத் தின்றி
நாட்டு மக்களின் நற்பணிப் பொருளைத்தம்
வீட்டிற் குவிக்கும் விருப்பமே கொள்வர்;
அம்முதற் பணியை ஆக்கிட அடியாய்
அவர் செயும் தீமை அளவிலை அந்தோ!
நாட்டு மக்களிடம் அறிவும் செல்வமும்,
நண்ணி இருப்பின் நமைமதி யார்என
எண்ணித் துணிந்த இயல்பி னாலே,
அறியாமை தன்னையும் வறுமை தன்னையும்
அகற்ற நினையார், ஆழமாய் வைப்பர்;
ஒற்றுமை நினைவை உண்டாக்க நினையார்,
பகைமைக் கருத்தைப் பலவாய் விளைப்பர்;
களவினைக் காமத்தைக் கள்ளை வளர்த்தே
உளநலம் போக்கி ஒழுக்கத்தை ஒழிப்பர்;
செருக்கும் சினமும் சிறந்து வளர
செய்வன பலவே! செய்வன பலவே!
அத்தகைத் தீயருள் ஒருவன் ஆனவன்
முத்தன் என்னும் முழுமகன் என்க
அவன்

அண்டை நாட்டுள் அரசாய் அமர்ந்து
மிண்டு செய்தது மிகப் பலவாகும்.

34

களவாடும் தொழிலதனில் கைவந் தோரைக்
கருத்தாக நன்கழைத்த கயமை முத்தன்
வளநீடும் மெய்ப்பொருள்தன் நாட்டில் புக்கு
வளம்திருடப் பணித்திட்டான்; வந்தோர் தம்மை
உளம்நாடும் ஒற்றர்கள்தாம் ஒற்றிப் பற்றி
ஒறுத்தனராய் உயிர்பிழைத்தே ஓடச் செய்தார்
சளம்நாடும் உளமுத்தன் சளைக்கா னாகிச்
சலம்நிறைந்த செயல்களையே சார்ந்து நின்றான்.

விளக்கக் குறிப்பு:-

வளம் என்றது ஆன்நிரை முதலான வளங்களை. எனவே, இது வெட்சிப் போர்த்தொடக்கம் ஆயிற்று.

35

அடுத்திருக்கும் நாடெல்லாம் பெரும்பாலும்
பகைநாடாய் அமையும் என்றே
எடுத்துரைக்கும் பொருள்நூலின் இயற்படியே
அமைந்திட்ட இகல்சேர் முத்தன்
வடுப்படவே எல்லையுள வரம்புகளை
மிகஅழித்தும், வரம்பு மீறி
மடுத்திருக்கும் மண்கொண்டும், வஞ்சிப்போர்
பலசெய்து வஞ்சித் தானே.

விளக்கக் குறிப்பு:-

பொருள்நூலை வடநூலார் அர்த்த சாஸ்திரம் என்பர். அந்நூல் ஒரு நாட்டிற்கு அடுத்த நாடு பகைநாடாக இருக்குமென்றும், பகை நாட்டிற்கு அடுத்த நாடு நட்பு நாடாய் இருக்கும் என்றும் கூறும். எனவே, முத்தன் என்பான் அடுத்த நாட்டின் அரசனாய் வந்துள்ள காரணத் தாலும், அவனிடத்தும், அவன் நாட்டு மக்களிடத்தும் நற்பண்பில்லாமையானும் பல போர்களைச் செய்தான் என்க.

36

நல்லதொரு பண்புள்ள சான்றோராம்
வீரரையே நண்ணி நிற்கும்
வெல்லுமா மிகவுள்ள மெய்ப்பொருளா
தலின்விளைந்த வேண்டாப் பேரில்
கொல்லுமா செய்யாமல் கொடியோன்றன்
கொடும்படைகள் குலைந்தே ஓடிச்
செல்லுமா செய்திட்டான்; செயலிழந்தார்;
சினமிழவார்; சிறுமை நீங்கார்.

விளக்கக் குறிப்பு:-

வேண்டாப் போர் - மெய்ப்பொருள் நாயனார் விரும்பாப்போர்.

சான்றோர் - போர்வீரர்,

"சான்றோர் மெய்ம்மறை" என்னும் பதிற்றுப்பத்தை நோக்குக.

37

இழிந்தவன் முத்த னேனும்
எதிர்ந்துசெய் போரின் கண்ணே
அழிந்திட ஆவி போக்கும்
அமர்தனைச் செய்தி டாமல்
ஒழிந்துநின் றோடி உய்ய
உற்றிடும் போரே செய்து
தழிஞ்சிஎன் துறையைப் பெற்றான்
தமிழ்தெரி மலாடர் கோமான்.

விளக்கக் குறிப்பு:-

தொல்காப்பியம் புறந்திணையியலில் வஞ்சித் திணை யைக் கூறும் பகுதியில் "அழிபடை தட்டோர் தழிஞ்சி" (சூத்திரம்-7) என்னும் நூற்பாப் பகுதியை அறிக.

38

நன்மைக்கும் தீமைக்கும் போர்தான் வந்து;
நன்மைதான் தோற்றுவிடில் தீங்கைச் செய்யா,
தின்மைநிறை தீமைதான் தோற்றுப் போனால்
தெரிந்தடங்கி நில்லாமல் தீங்கே செய்யும்
என்னுமுரைக் கிலக்காக, இழிந்த முத்தன்
இழிசெயலைச் செய்தேனும் வெல்ல எண்ணித்
துன்மைநிறை பலவற்றை எண்ணி எண்ணித்
தோன்றாமல் உளம்குமுறி நின்றான் பாவம்!

விளக்கக் குறிப்பு:-

நன்மைக்கும், தீமைக்கும் போர் என்றது, பண்புடை யாரைப், பண்பாகவே கூறும் மரபு என்க.

நன்மை - நற்பண்புடையார்.

தீமை - தீப்பண்புடையார்.

தீங்கைச்செய்யாது - என்னும் வினைமுற்று இறுதி தொக்கு, தீங்கைச் செய்யா, என நின்றது.

நல்லோரின் இயல்பும் தீயோரின் இயல்பும் தீயவனாகிய முத்தனின் செயலும்

39

நல்லறிவு பெற்றவர்கள் தோல்விவெற்றி
இரண்டிடத்தும் நடுவாய் நிற்பர்;
புல்லறிவு பெற்றவரோ வெற்றிவரின்
பூரிப்பர்; பொருந்தாத் தோல்வி
ஒல்லவரின், உளம்உடைந்து சோர்வுற்றே
செயலறுவர்; செயல றாமல்
கல்லனைய இம்முத்தன் கடும்சினமும்
வஞ்சகமும் கலக்க நின்றான்.

40

வலியினால் முத்தன் வெல்ல
வழியிலை; வலிமை மிக்க
புலியினார் படைக ளோடு
பொருந்தினன் மலாடர் கோமான்;
நலிவினார் வஞ்சம் மிக்க
நரிச்செயல் ஒன்றி னாலே
எலியினார் செயலைச் செய்ய
எண்ணினன் இழிவே மிக்கான்.

விளக்கக் குறிப்பு:-

புலியின் ஆர்படை - புலிகளைப் போலப் பொருந்தும் படை.

எலியினார் - இழித்தற்கண் வந்த உயர்வு

இழிந்தவர் இயல்பு

41

அறிவிலா உளத்தின் கண்ணே
ஆய் செயல் அமைவதில்லை,
மறிவிலா ஆசை யோடு
மன்னியே பொறாமை நிற்கும்
பிரிவிலாச் சினம்செற் றங்கள்
பின்னியே பெருகி நிற்கும்
இரிவிலா வஞ்சம் பொய்யோ
டிணைந்துநன் கிருக்கும் கண்டீர்.

விளக்கக் குறிப்பு:-

முன் இரண்டடி வல்லின றகர எதுகை.
பின் இரண்டடி இடையின ரகர எதுகை.

இதுவும் அது

42

உயிரோடு நெருங்கிவளர் உள்ளமே
நலம்தீங்கை உதவும் என்றே
அயிராமல் அறிந்தனராய் அவ்வுளம்தான்
தீப்புலனை அணுகா வண்ணம்

செயிர்நீக்கிச் செலுத்துகின்ற சீராளர்
தமக்கன்றிச் செருக்கே நிற்க
அயராமல் தீச்செயலை அகந்தனிலே
வளர்ப்போரால் ஆக்கம் உண்டோ.

விளக்கக் குறிப்பு:-

உடம்பும், ஐம்பொறிகளும் உயிருடன் நெருங்கி வாழும் இயல்புடையன அல்ல, அந்தக்கரணமாகிய உள்ளமே உயிருடன் 'அமைச்சும் அரசும் போல' நெருங்கி இயைந்து நலம் தீங்கை அறிந்து அறிவிக்கும் என்க. அதனால் உயிரோடு நெருங்கி வளர் உள்ளம், என்று கூறப்பட்டது.

அடங்காத தீக்குணமும் கடுமொழியும்
தீச்செயலும் அமைந்து நிற்க,
மடங்காத தன்னலமும் மன்னுகின்ற
அவராலே மக்கட் கெல்லாம்
கெடுங்காலம் விளைதலன்றிக் கிட்டுமோ
சிறுநன்மை? கேடே செய்து
அடுந்தீய விலங்காலே அறம்விளையும்
எனஎவர்தாம் அகங்கொள் வாரே.

விளக்கக் குறிப்பு:-

கொல்லும் இயல்புள்ள கொடிய விலங்கால் நன்மை விளையும் என்று எவரும் கருதார். அஃதே போல தீக்குணமும், கொடுமொழியும், பெருஞ்சினமும் பெற்றிருத்த லோடு அமையாது தன்னலமும் பெற்ற ஒருவரால் நன்மை

விளையும் என்று எவரும் கருதார். முத்தன் அவ்வியல்பு டையான் என்பது கருத்து.

அவ்விழந்தவருள் ஒருவராகிய முத்தனின் சூழ்ச்சி

44

உள்ளநலம் இல்லாத தீ விலங்கு
போலாகி உறையும் முத்தன்
கள்ளவினை ஒன்றாலே மெய்ப்பொருளைக்
கடிவனெனக் கறுவி நின்றான்;
மெள்ளஅதற் குரியதனை மிகக்கருதி
ஆய்ந்தாய்ந்து மிக்க தொன்றைத்
தள்ளரிய செயலாகக் கொள்வதற்கே
தலைப்பட்டான் தகைமை இல்லான்.

விளக்கக் குறிப்பு:-

விலங்குகளில் சில உள்ளநலம் உடையனவும் உண்டு, பல உள்ள நலம் இல்லாதனவாய் இருக்கும். அவ்விலங்கு போன்றவன் முத்தன் என்க.

முத்தன் சூழ்ந்து துணிந்தது

45

காமுற்று நுகர்கின்ற கழிசிறந்த
பொருள்எவையோ காண்பேன் என்றே
தோம்மிக்க உளத்தாலே மிகத்துருவி
ஆய்ந்திட்டான் தோன்ற வில்லை;

சேம்மிக்க சிவனடியார் திருவேடம்
தமைக்கண்டால் சிவம்கண் டாற்போல்
ஓம்மிக்க உளத்தோடும் உருகிநின்று
பணிந்து நிற்கும்உண்மை கண்டான்.

விளக்கக் குறிப்பு:-

சேம்மிக்க — செம்மை மிக்க

ஓம்மிக்க — ஓம்புதல் மிக்க.

உலகப் பொருள்களில் மெய்ப்பொருள் விரும்பி நுகரும் பொருள் எதுவோ அதன் வாயிலாகத் தீங்கு செய்யலாம் என்று முத்தன் கருதி ஆய்ந்தான். மெய்ப்பொருள் அப் பொருள்களில் பற்றின்றி ஒழுகுதலால் அவன் காமுற்ற பொருள் முத்தனுக்குத் தோன்றவில்லை.

மெய்த்தவர் வரவு காணின்
மிக்கபே ரன்பே கொண்டு
கைகுவித் திறைஞ்சி அன்னார்
கருத்தொடு பழகி நிற்கும்
செய்தவச் சிறப்பின் மிக்க
செம்மனச் செல்வன் முன்னே
பொய்த்தவ வேடம் கொண்டு
போய்வெல்லக் கருதி னானே

முத்தன் பொய்த்தவ வேடங் கொண்டது.

47

கண்ணைக் கவரும் சடைமுடியும்
கருத்தை இழுக்கும் திருநீறும்
எண்ணந் தன்னை மிக இழுக்கும்
எண்ணற் கரிய மணிவடமும்
நண்ணும் காவி உடைப்பொலிவும்
நன்றாய் அமைந்தே அழகுசெய,
மண்ணிற் கண்டோர் சிவமென்றே
மதித்துப் பணியும் வடிவுகொண்டான்.

விளக்கக் குறிப்பு:-

மணிவடம் - உருத்திராக்க மணிவடம் "ஆயிரம் அக்கமணி அணிந்தவர் அரன் எனப்படுவர்." ஆதலின் எண்ணற்கரிய மணிவடத்தை அணிந்தான் முத்தன்.

'கண்ணைக் கவரும் சடைமுடியை 'வேணிகள் முடித்துக் கட்டி' என்பர் சேக்கிழார்.

48

ஆக மங்கள் போல்விளங்கும்
அழகார் சுவடித் திரளுள்ளே
வேக வாளாம் படையொன்றை
விளங்கா வண்ணம் மறைத்தமைத்தான்;
மோக இருள்தான் அகத்திருக்க,
மோகம் நீக்கும் ஐந்தெழுத்தை
நாகம் போன்ற நாவாலே
நன்றாய் உரைத்து வந்தானே.

49

வந்து புகுந்தான் நகரதனில்;
வழியிற் கண்ட மக்களெலாம்
சிந்தை மயங்கிச் சிவமென்றே
செய்ய அடியில் வணங்கிவிட,
முந்தும் அரசன் திருக்கோவில்
முகப்பில் நுழைந்தான்; காவலர்கள்,
"இந்த வேடம் எம்இறைக்கே
இனிய வேடம்" எனவிடுத்தார்.

விளக்கக் குறிப்பு:-

வணங்கிவிட - வணங்கி வழியனுப்ப "எம் இறை. என்றது, மெய்ப்பொருள் நாயனாரை."

50

இடையே இருந்த பலதடையை
எளிதாய்க் கடந்த முத்தனுக்குத்
தடையாய் நின்றான் இறுதியிலே
தத்தன் என்னும் தகவுடையான்;
"நடையேய் செயல்கள் பலமுடித்து
நண்ணித் துயிலும் எம்இறைவன்;
புடையே தங்கி விழித்தவுடன்
புகுதல் நலமாம்" எனத்தடுத்தான்.

51

செய்யும் தவத்தில் நீங்காதேன்
சிறிது நீங்கி மன்னற்கே
உய்தி உரைக்க வந்திட்டேன்;
உற்ற காலம் தாழ்த்தாதே;
மெய்யைக் கூற வந்தவர்க்கு
மேவும் தடையே இலையென்று
பையக் கூறி, உள்புகுந்தான்;
பாவம்; தத்தன் விட்டுவிட்டான்.

விளக்கக் குறிப்பு:-

மெய்யைக் கூற - என்ற சொல் உண்மையைக் கூற என்ற ஒரு **பொருளையும்**, உடம்பினைக் கூறுபடுத்த என்ற மற்றொரு **பொருளையும்** தருதல் காண்க.

பையக் கூறி, பைய உள்புகுந்தான் எனக் கூட்டுக. முன்னே மறுத்த தத்தன், முத்தன் பையக் கூறிய மொழியில் மயங்கி, உள் புகுமாறு அவனை விட்டுவிட்டான் என்க.

52

கஞ்சத் தவிசின் திருவனைய
கற்பின் மனைவி புறங்காப்ப
மஞ்சம் அதனில் துயில்மன்னன்
மருங்கே கொடியோன் வந்துநின்றான்
அஞ்சி மடந்தை துயில்எழுப்ப
அரசன் உணர்ந்தே, அவண்நிற்கும்
நஞ்சந் தனையே உள்வைத்த
நல்ல வேடந் தனைக்கண்டான்.

விளக்கக்குறிப்பு:-

அரசர்கள் துயிலும் பொழுது, ஏனைய காவலரினும் கற்புடைய மனைவியே அருகிலிருந்து காப்பாள் என்க.

வேடந்தனைக் கண்டான்-வேடம் தாங்கிய முத்தனைக் கண்டான்.

53

காவி உடையும் சடைமுடியும்
கவின வெண்ணீ றணியழகை,
மேவ அணிந்த அக்கமணி
மேன்மேற் செய்யும் பேரழகை,
நாவின் உரைக்கும் மந்திரத்தின்
நலமார் அழகைக், கண்டமன்னன்;
தேவிற் சிறந்த சிவம்வந்த
தென்றே தெளிந்து வணங்கினான்.

அப்பொழுது முத்தன் அரசனைப் பார்த்துக் கூறியது

54

உங்கள் பெருமான் ஐம்முகத்தால்
உரைத்த மறைகள் பலவற்றுள்
துங்க மாகும் ஒருமறையைத்
தோன்ற உரைக்க வந்திட்டேன்;
இங்கிப் பொழுதே தனியிடத்தே
இருந்து விரும்பிக் கேட்கவென;

அங்கப் பொழுதே அரசன்றான்
அதனைக் கேட்கத் தலைப்பட்டான்.

விளக்கக் குறிப்பு:-

துங்கம் ஆகும் ஒருமறை - தூய்மையாகும் ஒப்பற்ற சிவாகமத்தை.

துங்கம் — தூய்மை.

55

தன்னந் தனியாம் நல்லிடத்தில்
தக்க மேடை தனிலமைந்த
பொன்னந் தவிசில் அமர்வித்துப்,
புதிய புனலால் கால்துலக்கி,
உன்னும் நீறால் மணச்சாந்தால்
உயர்ந்த மலரால் அருச்சித்து,
மன்னும் தூபம் ஒளிகாட்டி,
மலரைக் கையால் எடுத்தனனாய்

விளக்கக் குறிப்பு:-

உன்னும் நீறு - என்பது திருநீறு.

மணச்சாந்து - சந்தனக் குழம்பு

மன்னும் தூபம் - நிலைபெற்ற நறுமணப்புகை, மலரைக் கையால் எடுத்து - பூசை முடிவில் காலில் இட்டு வணங்குதல் இறுதி வணக்கம் என்க.

"மலரைக் கையால் எடுத்தனனாய்" என்னும் எச்சத் தொடர் அடுத்த பாட்டில் உள்ள "பத்தியுடனே பணி காலம் "என்னும் தொடருடன் முடியும்.

56

பத்தி யுடனே பணிகாலம்
பார்த்தான் கொக்கின் குணமுடையான்
அத்தன் தானும் தனைமறந்தே
அரன்றன் அடியை அகத்திருத்தி
முத்தன் முன்னே பணிந்திட்டான்
மூடி இருந்த பொதிநீக்கிக்
கத்தி எடுத்துப், புறங்காட்டாக்
கனமாம் வெண்னில் எறிந்தானே.

விளக்கக் குறிப்பு:-

கொக்கின் குணமுடையான் - என்றது முத்தனை.
அத்தன் - மெய்ப்பொருள் நாயனார்.
வென் - முதுகு.

அரசன் தனக்குச் செய்த உண்மை அன்போடு கூடிய வழிபாடும் முத்தன் மனத்தை மாற்றிவிடவில்லை. ஆதலின், அவன் கொக்கின் குணமுடையான் எனக் கூறப்பட்டான்.

57

நஞ்சினை உண்ட எம்மான்
நல்லடி உளத்த தாக
அஞ்சிலன் அரசன் ஓங்கி
"அரகர சிவனே" என்றான்.
நெஞ்சினை அங்கே வைத்த
நிறையன்பின் தத்தன் கேட்டே,
எஞ்சிலன் ஓடி வந்தான்;
இழிமகன் செயலைக் கண்டான்.

விளக்கக் குறிப்பு:-

உலகநலம் கருதி அஞ்சாமல் செயல்புரிந்த நஞ்சுண்டேசுரன் திருவடியையே கருதியிருத்தலால் அரசன் அஞ்சிலன் என்க.

எஞ்சிலன் - காலம் தாழ்த்தாதவனாய்.

அப்பொழுது முத்தனை ஒறுக்க முயன்ற தத்தனை நோக்கி மெய்ப்பொருள் நாயனார் கூறியவை.

58

ஒறுக்க வேண்டி ஓடிவந்த
உண்மைத் தத்தன் தனைப்பார்த்துப்
"பொறுக்க வேண்டும் நல்தத்தா!
பொருந்தும் நமரே இவர்தாம்காண்
கறுக்கச் சினக்க வேண்டாம் நீ;
கருணை தாங்கிப், புறங்காத்து,
வெறுக்கும் தமரின் மிறைநீக்கி
வேண்டும் புலத்தே விடு"என்றான்.

விளக்கக் குறிப்பு:-

கறுக்கச் சினத்தலாவது - உள்ளமும், உரையும், உடம்பும் வெதும்புமாறு சினத்தல்.

'தமரே' என்றதில் உள்ள ஏ காரம் தேற்றம் என்க. இவர் பகைவர் அல்லர். சிவவேடம் அணிந்திருத்தலின் நமரே எனக்கொள்ளின் பிரிநிலை ஏகாரமும் ஆகும்.

மிறை - துன்பம்.

இதுவும் அது

59

கொடியோர் தாமும் தம்உளத்தைக்
கோட்டம் செய்து தீங்கிழைத்தால்,
அடியாய் அறிவு அமைந்தோரும்
அவர்போல் செய்தல் அழகன்றே!
கொடியோர் செய்த தீங்கதனைக்
குறித்து மனத்தில் கொள்ளாமல்!
முடிய நன்றே செயல்வேண்டும்¡
முடிவாய் உரைப்போம் தத்தா! கேள்.

விளக்கக் குறிப்பு:-

கொடியோர் - அறிவில்லாத தீயவர்.

"அறிவுடையார் ஆவது அறிபவர்" (குறள் 427) ஆதலால், ஆவது அறிதலாவது - தமக்கு நன்மை அறிந்து ஒழுகுதல். ஆதலின் அறிவு அமைந்தோரும் அவர்போல் தீமை செய்து ஒழுகாது, நன்மையே செய்து ஒழுகவேண்டும் என்பது கருத்தாயிற்று.

60

யாம்கண் டனைய பணிபுரியும்
யாணர் நிறைந்த எம்இளைஞ
பேம்கண் டனைய நமர்தமையே
பேணிப் புரந்து நலமாகத்
தேம்கண் டனைய நல்லிடத்தைத்
தெரிந்து செலுத்திப் பின்னதனை

நாம்கண் டமைய உரைத்திடுக
நல்ல பணிமுன் செய்கென்றான்.

விளக்கக் குறிப்பு:-

"யான்கண் டனையர் எம்இளையரும்" - என்னும் புறநானூற்றடியை நோக்குக.

"பேம்கண் டனைய நமர்" - என்றது முத்தனை. நாம் கண்டு அமைய - நாம் உணர்ந்து அமைதிபெற,
முன்செய் - விரைந்து முன்னே செய்.

நகரமக்கள் கேட்டு அரண்மனை முகப்பில் குழுமியது.

61

அரண்நலம் உடைய மனையகத் திருந்த
அறிவுசால் மெய்ப்பொருள் அரியை
முரண்நிறை சிறிய குறுநரி ஒன்று
முடுகியே கடித்திடும் செயலைத்
திரணிறை நகர மக்கள்தாம் தெரிந்து
திரண்டனர் குவிந்தனர் சினந்தார்
அரண்மனை முகப்பில் சூழ்ந்தன ராகி
அருந்துய ரடைந்துநின் றனரே.

விளக்கக் குறிப்பு:-

மெய்ப்பொருள் அரியை - மெய்ப்பொருள் நாயனார் ராகிய சிங்கத்தை.

தத்தன் செயல்

62

மன்னவன் மொழிந்த முதற்பணி யதனை
மனங்கொள முடித்திடும் தத்தன்
அன்னமுத் தனுக்கே கவசம தாகி,
அரசன தாணையை அறைந்தே,
தன்னிடம் வந்த அரசியல் சுற்றம்
தகுமுறை உறவினர் குடிகள்
என்னவந் துற்ற எவரையும் நீக்கி,
இடர்புகா வகையினிற் காத்து,
முன்னிடும் அவன்றன் நாட்டினுட் புகுத்தி,
முன்னிறைக் குணர்த்திட விரைந்தான்.

விளக்கக் குறிப்பு:-

தத்தன் கவசம் ஆகி, அறைந்து, நீக்கி, காத்து, புகுத்தி, முன் இறைக்கு உணர்த்திட விரைந்தான் என முடிக்க.

கவசம் ஆகல்-தன் கையால் அவன் மெய்யைத் தழுவிக் கொள்ளுதல்.

63

கேட்டினைப் புரிந்த கீழ்மகன் தனக்கும்
கேடுவா ராமலே காத்து
நாட்டினுட் புகுது மாறுசெய் திட்ட
நன்மன மெய்ப்பொருள் முன்னர்
ஓட்டமாய் வந்த உயர்பணி யாளன்
உரைபணி முடித்தமை உரைத்தான்;

கேட்டஅப் பொழுதே குறையெதும் இன்றிக்
கிட்டினன் அமைதியை மன்னன்.

விளக்கக் குறிப்பு:-

உரைபணி - இறந்தகால வினைத்தொகை. உரைத்த பணி என விரியும். இறக்கும் காலத்தில் எக்குறையும் இன்றி அமைதிபெற வேண்டும் என்க. அமைதி - சாந்தி.

அமைதியைக் கிட்டினான் - அமைதியை அடைந்தான்.

அப்பொழுது உலகமக்களுக்கு மெய்ப்பொருள் உரைத்த உறுதிமொழி

64

பகைத்தவன் தன்னைப் பகைவனாய்க்
கொளாமல்
பண்புடை நண்பனாய்க் கருதும்
தகைக்குணம் ஒன்றே தரணியில் தழைக்கில்
தகுதியில் கலகமும் போரும்
மிகைத்திடல் உண்டோ? மேன்மைசால்
அமைதி
மேவுமே; இந்நலம் வாய்க்க
உகைத்திடும் உளத்தை வென்றிடும் ஆற்றல்
உண்மையாய் நம்மிடம் வேண்டும்.

விளக்கக் குறிப்பு:-

மிகைத்திடல் - கலகமும், போரும் மிகுந்து துன்பம் விளைவித்தல்.

பகைத்தவனைப் பகைவனாய்க் கொள்ளாமல் நண்பனாய்க் கருதுதல்

''ஒல்லார் இடவயின் புல்லிய பாங்கு'' (தொல். புறத்திணை-19) என்னும் வாகைத்திணை ஆகும்.

'உகைத்திடும் உளம்-பகைத்தவனிடம் பகையே கொள எழும் உள்ளம்' இத்தகைய உள்ளத்தைத் தடுத்து நண்பனாய்க் கொள்ளச் செய்தல் உள்ளத்தை வெல்லுதலாம். இதனை 'ஆத்மஜித்' என்பர் வடநூலார்.

மெய்ப்பொருள் தன் இறுதிக் காலத்தில் உலக மக்களுக்கு உரைத்த உறுதிமொழி

65

''மெய்ம்மையும் அறிவும் இன்பமும் நிறைந்த
மெய்ப்பொருட் சிவத்தையே பற்றி,
பொய்ம்மையும் அசித்தும் துன்பமும்
பொருந்தும்
பொய்ப்பொருட் பற்றினைப் போக்கிச்
செம்மைய நீறும் திருவிழி மணியும்
சேர்ந்திடும் தொண்டரைக் காணின்
இம்மையில் கண்ட கடவுளர் போல
எண்ணிநீர் இறைஞ்சுக'' என்றான்.

விளக்கக் குறிப்பு:-

திருவிழிமணி - உருத்திராக்கமணி.

மெய்ப்பொருள் மெய்ப்பொருளுடன் ஒன்றியது

66

என்றபின் உளத்தில் எதனையும் பற்றி
இரங்கியே துன்பமெய் தாமல்
மன்றில்வாழ் இறைவன் திருவுரு வொன்றே
மன்னிநின் றின்பினைச் செய்ய,
ஒன்றிய உடலம் உலகிடைக் கிடப்ப
உள்ளமெய்ப் பொருளொடும் ஒன்றி
நின்றனன் அடியார் வேடமே பொருளாய்
நிலைபெறும் நெறியில் நின்றவனே.

விளக்கக் குறிப்பு:-

அடியார் வேடமே பொருளாய் நிலைபெறும் நெறியில் நின்றவனாகிய மெய்ப்பொருள், என்ற பின், உளத்தில் எதனையும் பற்றி அவற்றின் பிரிவுக்கு இரங்கித் துன்பம் எய்தாமல், இறைவன் சகளத் திருவுருவம் ஒன்றே உளத்தில் மன்னி நின்று இன்பினைச் செய்ய, உடல் உலகில் கிடப்ப, நிட்கள வடிவாகிய மெய்ப் பொருளோடும் ஒன்றி நின்றனன்.

எவன் ஒருவன் இறக்குங் காலத்தில் எதனில் பற்று வைத்து இறப்பானோ, அப்பொருளாகவே அவன் பிறப்பான். அல்லது ஆவான்; என்பது நூல் துணிபென்க.

67

ஆனாத தீமைகளை அகத்தே பற்றி
அழகான வேடத்தைப் புறத்தேதாங்கிக்
கானாரும் செங்குன்றிப் போலே வைகும்
கயமைநிறை முத்தனெனும் கள்ளத்
தீயோனை
பேநாமும் உரும்என்னும் உரிச்சொல் போலப்
பேரச்சம் புரிந்தாலும் சிறிதும்அஞ்சான்
"ஏனாதி நாதன்போல்" வேடம் போற்றி,
எய்தரிய பெருவாழ்வை எய்தினானே.

விளக்கக் குறிப்பு:-

பேம்நாம் உரும்என வரூஉம் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப்பொருள.

(தொல்-உரியியல்-67)

என்னும் நூற்பாவின் நுண்பொருளை ஆராய்க

68

பாராதி பொய்ப்பொருளைத் தனதாகப்
பற்றுதற்கே பயின்ற நெஞ்சில்
ஆராத அவாத்தாங்கி உழலாமல்
அவைநீக்கி அசைவே யின்றிப்
பேரான செம்பொருளைப் பிழையாமல்
நன்கெண்ணிப் பிறப்பை நீத்தான்;
யாராலும் செயற்கரிய செயல்புரியும்
பெரியோனாய் யார்க்கும் நல்லோன்.

விளக்கக் குறிப்பு:-

யார்க்கும் நல்லோன் என்றது மெய்ப்பொருள் நாயனாரை. அது எழுவாயாய் நின்று, பிறப்பை நீத்தான் என்னும் பயனிலையோடு முடியும்.

பாராதிப் பொய்ப்பொருள் - மண், பொன், பெண் என்னும் மூன்று ஏடணைப் பொருள்கள்.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு" என்னும் திருக்குறளை அறிக.

யார்க்கும் நல்லோன்-நண்பர்க்கே அன்றி: பகைவர்க்கும் நல்லோன் என்பது கருத்து.

கண்டோர் கூற்று

69

அரசனுக் குற்ற அழிவை அறிந்தே
அலக்கண் அடைந்த அளவறும் மக்கள்
பற்பல மொழிந்து பரிந்து புலம்பினர்;
அவர்தாம்,
நாட்டு மக்கட்கு நற்றுணை யாகித்
தன்னலம் தணந்து பொதுநலம் போற்றி
அறியாமை அகற்றி அறிவு கொளுத்தியும்
வறுமைநீக்கி வளத்தினை வளர்த்தும்,
துன்பினைப் போக்கி இன்பினைப் புரிந்தும்,
மெய்மையாய் ஆண்ட மெய்ப்பொருள் வேந்தைப்
பொய்த்தவ னாகிப் புகுந்த புலைமகன்

பொய்ம்மொழி கூறிப் பொருந்த அழித்தது
அடாவிளை வென்றே அரற்றி அழுதனர்;
அவருள் சிலர்,
நன்மை விளைதலும் தீமை விளைதலும்
நல்லவர் தீயவ ராகிய
எல்லா மக்கட்கும் இயல்பென் றனரே.

விளக்கக் குறிப்பு:-

தமிழ் இலக்கியங்களில் 'கண்டோர் கூற்று' என்பது ஓர் உறுப்பாகும். இக்கண்டோர் கூற்றில் அந்த இலக்கிய நிகழ்ச்சியைப் பற்றி உலக மக்கள் கூறும் பல வகைக் கருத்துக்கள் எடுத்துக் கூறப்படும் என்க.

மேற்பாட்டில் நல்லோர்க்கு நன்மையே அன்றித் தீமையும் வரும் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

இதுவும் அது

70

தன்னையே கொன்றவற்கும் தவறாமல்
தலையளிசெய் தகவி னானைப்
பின்னையே இழந்ததனால் பீழைகொண்ட
மக்களெலாம் பெரிதும் மாழ்கி,
அன்னைபோல் விளங்கியமை ஆதரித்த
அரசனுக்கும், அந்தோ இந்தக்
கொன்னையே செய்கின்ற கொடியோனால்
கொடுமைவரல் குணமோ? என்றார்.

விளக்கக் குறிப்பு:-

கொன்னை - அச்சம் தரும் இடைச்சொல்
(தொல் – சொல் - இடை - 6)

இதுவும் அது

71

வேடம் என்பது யாதென வினவின்
கொள்கையைக் கொண்டோர் கொள்ளும் குறியே
அதுவே,
இல்லற வேடம் துறவற வேடம்
சமயிகள் வேடம் குழுக்கள்தம் வேடம்
இரப்போர் வேடமென எண்ணிறந் தவையாம்;
அத்தகை யாக அமைந்தவே டத்துள்
தவவேடம் என்பது தனிச்சிறப் புடையது;
தவவேட மதனைத் தாங்கி நிற்போர்
வேடத்திற் குரித்தாய் விளம்பும் நெறியை
மெய்மை யாக மேவிடல் வேண்டும்,
மெய்மை யின்றிப் பொய்மையை மேவின்
வேடத்தின் பெருமை விளங்காது கெடுமே;
இத்தகைக் கேட்டை எண்ணி ஆய்ந்து
விலக்கும் கடமை வேந்தன தாகும்;
அதனால்,

"வேட நெறிநிலார் தமைவிறல் வேந்தன்
வேட நெறிசெயின் வீடாது நாட்டிற்கே"
என்றே இயம்பினார் எம்திரு மூலர்;
ஆனால், இற்றைநாள், அதற்குமா றாகப்
பொய்ந்நெறி வேடம் பொருந்தப் புகுந்தே
மெய்ந்நெறி அரசையே மேவ மயக்கி
வீழ்த்தியது அந்தோ! மிகக்கொடிது என்றே
கண்ட அறிஞர் யாவரும்
கதறி அழுது கலங்கினர் மிகவே.

விளக்கக் குறிப்பு:-

பொய்த்தவவேடமுடையாரை ஒறுத்து வேடநெறி நிற்குமாறு செய்யும் அரசினையே பொய்த்தவமுடையோன் சிதைத்தது முறையற்றதாகும் என்பது கருத்து.

இதுவும் அது

72

தீங்கினைச் செய்த தீயவன் தனையும்
தெரிநமர் எனமொழிந் திடாமல்
பாங்குடன் 'நமரே' எனும்மொழி யதனால்
பரிவுடன் தோற்றமாய்ப் பகர்ந்தே
ஆங்குரை யுடனே அமைந்துநின் றிடாமல்
அணுத்துணைத் தீங்கும்வா ராமல்

ஓங்குறும் அருளால் பாதுகாத் துய்த்த
உயர்ந்தவன் மெய்ப்பொருள் என்பார்.

விளக்கக் குறிப்பு:-

உயர்ந்தவன் - உலகத்தில் இதுவரை வாழ்ந்திட்ட நல்லோர் பலருள்ளும் உயர்ந்த நல்லோன் என்க.

தீங்கு புரிந்தவனை நமர் என்று கூறாமல் தேற்றே காரந் தந்து "நமரே" என்ற சொல்லால் கூறியதோடமை யாமல், பின், செயலாலும் செய்து காட்டினான். "சொல்லுதல் யார்க்கும் எளிது; சொல்லிய வண்ணம் செயல் அரிது". ஆதலின், செயற்கரிய செய்த உயர்ந்தோன் என்க.

'தமர்' என்பதற்கும், 'நமர்' என்பதற்கும் வேற்றுமை அறிக. 'தம்' படர்க்கை. 'நம்' தன்மை.

இதுவும் அது
முத்தன் வெற்றியும் மெய்ப்பொருள் வாகையும்

73

இழிவான உள்ளமொடு பழிசெய்து
வென்றிட்டான் இகல்சேர் முத்தன்;
கழிமிக்க பேரன்பின் கருணைவிளை
உள்ளத்தான், கரவே செய்து
பிழையாகப் பிழைத்தானைப் பீடுபெறத்
தாங்கிநின்ற பெருமை செய்தே

இழையாக வாகையினை ஏற்றம்வரப்
புனைந்திட்டான் என்பர் கற்றோர்.

விளக்கக் குறிப்பு:-

கற்றோர் - என்றது தமிழில் பொருளிலக்கணம் கற்றோரை.

தொல்காப்பியம் புறத்திணை இயலில் வாகைத் திணையைக் கூறும் நூற்பாவுள் (17).

"பிழைத்தோர்த் தாங்கும் காவலானும்" என ஓதி யுள்ளமையை ஓர்க.

கழிபிக்க பேரன்பின் கருணைவிளை உள்ளத்தான் என்றது மெய்ப்பொருள் நாயனாரை.

இதுவும் அது

74

மேம்பட நலமே செய்து
மேதினி தனில்வாழ் வோரை
ஆம்படக் காப்ப தன்றி,
அகமெலாம் வஞ்சம் நிற்கப்
பாம்பென வாழ்வோர் தம்மைப்
பார்தனின் நலமே வேண்டிச்
சாம்படி அடித்துக் கொல்கை
சாலுமே, விடல்தீ தென்பார்.

விளக்கக் குறிப்பு:-

உலக மக்களில் சிலர், உலக மக்களின் நலம் கருதி முத்தனை உடனே கொன்றிருக்க வேண்டுமேயன்றி அவனை விட்டதால் உலகத்திற்குத் தீங்கே விளையும் என்றனர்.

இதுவும் அது

75

பிறர்நலம் கருதல்·இன்மொழி பேசல்
பிறர்நலம் செய்தலால் உவத்தல்
திறமுறு பெரியர் செய்கையாம்; திறம்பித்
தீமையைத் திறம்படக் கருதி
அறவிய லார்க்கும் அழிசெயல் ஆக்கல்
அய்யகோ சிறியவர் செயலே!
புறவிய லான இப்பெருந் தீங்கு
புவியையும் அழித்திடும் என்பர்.

இதுவும் அது

ஒல்லார் இடவயின் புல்லிய பாங்கு

76

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம்
வாய்மையுடன் ஐந்தும் பெற்ற
இன்பமார் சான்றோனாம் மெய்ப்பொருள்
தான்
இன்னாமை செய்தோன் தன்னைத்

துன்பமாய் வெகுளாமல் இருந்ததொன்றோ?
வெகுள்பவரைத் தூரப் போக்கி;
நன்பனாய் நல்லிடத்தை நண்ணவிட்டான்
நன்மனத்தை நாடூர் என்பார்.

விளக்கக் குறிப்பு:-

இப்பாட்டும் தமிழ்ப் பொருளிலக்கணம் கற்றோர் கூற்றென்க.

தொல்காப்பியம் புறத்திணையியலில் வாகைத் திணையைக் கூறும் ''ஒல்லார் இடவயின் புல்லிய பாங்கு'' எனும் நூற்பாவைப் பார்க்க.

நண்பனாய் = நண்பனாய்க் கொண்டு எனப் பொருள்கொள்க.

இதுவும் அது

77

அழிவதாய் அவாவிற்கே உறைவிடமாய்
அளவிறந்த அலக்கண் ஆக்கும்
இழிவதாய் இருக்கின்ற பொய்ப்பொருளை
எண்ணாமல் இருக்கும் எம்மான்
கழியதாம் பற்றெல்லாம் கழலநின்ற
கருத்தாலே கலங்கா னாகிச்

செழியதாம் உள்ளத்தில் சிவம்நிற்கும்
சிறப்படைந்தான் என்பர் சில்லோர்.

இதுவும் அது

78

உள்ளமே தூய்மைபெறின் உள்நலமும்
புறநலமும் உண்டாம் கண்டீர்;
கள்ளமே முதலான தீக்குணங்கள்
சிறிதுமின்றிக் கடிந்து காத்துத்
தெள்ளிதாம் திருவருளை நல்லறிவை
வாய்மையுடன் திகழ வைத்தால்
ஒள்ளியதாய் நாம்வாழ்வோம் உலகமெலாம்
நலம் அடையும் உண்மை என்பார்.

விளக்கக் குறிப்பு:-

உலகமக்களில் சிலர், முத்தனைப்போல் உள்ளத்தில் வஞ்சகம் வைத்துத் தீங்கு புரியாமல் மெய்ப்பொருளைப் போல் உள்ளத்தில் திருவருளையும் நல்லறிவையும், வாய்மை யையும் வைத்து வாழ்ந்தால் நாமேயன்றி நம்மைச் சூழ்ந் துள்ள உலகமும் நலம் அடையும் என்பார்.

முத்தனைப் போல் கள்ளம் முதலானவை இன்றி, மெய்ப்பொருள் போல் அருள் முதலானவை பெற்று வாழ்ந் தால் என்பது இசையெச்சம்.

முடிவுரை

79

கள்ளத்தால் விளைந்த தீங்கைக்
காதையாற் கேட்ட நல்லீர்!
தெள்ளூற்ற அறிவை நல்கும்
திருமடம், திருவார் கோவில்,
உள்ளூற்ற அடியார் வேடம்
உளஇவை மூன்றும், நன்றாய்
ஒள்ளூற்று வாழ்ந்தால், நன்மை
உளவென உணர்ந்து கொள்வீர்.

விளக்கக் குறிப்பு:-

உள இவை மூன்று - தெளிந்த அறிவினைக் கொடுக்கும் திருமடங்களும், பக்தி செய்வதற்கு இடமான திருக்கோவில் களும், பக்திசெய்யும் தொண்டர் வேடமும் என்னும் மூன்று என்க. இவற்றைக் குரு லிங்க சங்கமம் என்பர்.

'மடம்' என்பது இரண்டாம் டகரத்தால் ஆகிய வடசொல் ஆகும். இச்சொல்லின் பொருளை "மடசாத்திராதி நிலையம்" என்று அமரகோசம் கூறும். மடம் என்பது சாத்திரன் என்னும் சீடர்கள் ஞானநூல் பயின்று வாழும் இடம் என்க. எனவே, ஞானநூல் புலமையுடைய ஆசிரியர் எழுந்தருளி

யிருந்து போதிக்க, அதைக் கேட்டுச் சிந்தித்துத் தெளியும் சீடர் தங்கும் இடமே திருமடம் ஆகும் என்பது பொருள்.

வாழ்த்து

80

தெள்ளிய அறிவைத் தந்து
திருமடம் எல்லாம் வாழ்க;
ஒள்ளிய பத்தி ஓங்க
உயர்திருக் கோவில் வாழ்க;
கள்ளமில் லாமல் என்றும்
கடவுள்தம் வாய்மை கண்டு
நள்ளுறும் தொண்டர் கூட்டம்
நாடெலாம் நன்கு வாழ்க.

விளக்கக் குறிப்பு:-

திருமடங்களெல்லாம் அறிவின் கருவூலமாகவும், திருக் கோவிலெல்லாம் பக்திக் கருவூலமாகவும், தொண்டர்கள் எல்லோரும் கடவுள் வாய்மையை அறிந்துணரும் அனுபூதிக் கருவூலமாகவும் விளங்கவேண்டும் என்பது கருத்து.

மெய்ப்பொருட்காதை முற்றும்.

குறிப்புகளுக்காக

தேவாரப்பண்போன்றஇனியபேச்சும்,
திருநீற்று நல்லொளியும் வட்டப் பொட்டும்,
பாவாரம் தினம்சூடும் ஈசன் மீது
பக்திமிகு கருணைக்கண் ஒளியும் கொண்டு
நாவாரத்தமிழ்ச்சொல்லிப்புலவர்தம்மை
நன்னூற்றுக் கணக்கினவே படைத்த தொண்டர்
தாவார ஓய்வேற்கும் வயதில் இன்றும்
தமிழ்ப்பணிசெய் எம்ஆசான் அடிக ளாசான்!

ஆழ்ந்துபடிப் போர்மட்டும் அதிச யிக்கும்
அடிவேரின் கரும்பைப்போல் கவிதை செய்தும்
தாழ்ந்தகடல் போலடக்கம் கொண்ட இந்த
தமிழ்க்கடலை காண்போர்கள் அதிச யிப்பார்!
ஊழ்நலத்தால் குனகயூரில் வந்து தோன்றி
உயர்ந்ததமிழ்த் தொண்டுசெயும் முனிவர்! இன்னும்
வாழ்நாளில் சொல்விளக்கம் கோடி செய்து
வருங்காலத் தமிழர்க்கு நிதிநூல் சேர்ப்பார்!

கவிதை : நூலாசிரியரின் ஏகலைவச் சீடர்
திரு. கவிஞர் பெ. ஆராவமுதன், பி.எஸ்.சி, பி.எட்,
கல்லக்குறிச்சி